Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 01 புதன்கிழமை (17.08.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 241

ராம்கோ
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
RAMCO CEMENT
சீமெந்து

# அமைச்சர் கதிர்காமரின் கொலை சமாதான செயற்பாட்டை பாதிக்காது

## போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கே ஆபத்து - தமிழ்ச்செல்வன்

(லண்டன்)

**வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை, சமாதான முயற்சிகளில் தாக்கத்தை ஏற்படுத்துமென தாம் நம்பவில்லை என்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். நேற்றுக் கிளிநொச்சியில் ஊடகவியலாளர்களை சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையை அடுத்து யுத்தநிறுத்த ஒப்பந்தம்மிக மோசமான நிலையினை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

சீர்செய்யமுடியாதளவிற்கு செல்கின்றதோ என சிந்திக்கவைக்கக் கூடிய சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகால நிலையை அங்கீகரிப்பதற்கு பாராளுமன்றம் நாளை கூடுகிறது

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையைத் தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்பட்ட அவசரகால நிலை மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்கப்பட வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா கேட்டுள்ளார்.

அதனை அங்கீகரிப்பதற்காக பாராளுமன்றத்தின் விசேட கூட்டத்தொடர் ஒன்றை நாளை 9.30 மணிக்கு கூட்டவுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் பாராளுமன்றத்திற்குச் சமூகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

நாளை பாராளுமன்றத்தை கூட்டும் அறிவித்தல் ஜனாதிபதியால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளதாக சபை முதல்வரும் அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளருமான அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வாவினால் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதிக்குரிய (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மீட்புநிதி மீளளிப்பிற்கு 12 ஆயிரத்து 700 பேர் தெரிவு

### தெரிவானோரின் விபரம் உள்ளே

(கிளிநொச்சி)

தமிழீழ நிதித்துறையினரால் தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிக்கப்படவுள்ளது. குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட 1200 பேருக்கும், மூப்பின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 11 500 பேருக்குமாக மொத்தம் 12 ஆயிரத்து 700 பேருக்கு தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் அறவித்துள்ளார்.

மீட்பு நிதி பெறுவதற்கான நடைமுறைகள் மற்றும் மீட்பு நிதி பெறுபவர்களின் விபரங்கள் 5ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (ச)

## சினைப்பர் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் பலி

திருகோணமலை மூதூர் பிரதான பாதையில் 64 ஆம் கட்டைப் பகுதியில் உள்ள கிரியந்தி மலையின் அடிவாரத்தில் இராணுவக் காவலரணை அண்மித்த பகுதியில் நேற்று மதியம் 1.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் அங்கு காவல் கடமைக்குச் சென்ற மாத்தறை அக்குரக்கொடவைச் சேர்ந்த 7 ஆம் காலாற் பிரிவில் பணியாற்றும் லான்ஸ் கோப்ரல் எச்.கே.ஏ. ஹெந்தெனிய (வயது 30) என இராணுவம் அறிவித்துள்ளது.

சினைப்பர் ரகத் துப்பாக்கியின் மூலமே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகளே இத் தாக்குதலினை மேற்கொண்டதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

இவ் இராணுவ வீரர் தலைக் கவசம் அணிந்திருந்ததாகவும், எனினும் இவரின் முகத்திற்கே குறிபார்த்துத் தாக்குதல் நடத்தப் பட்டதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை தொட்டுப்பொல என்னும் இடத்தில் இராணுவக் காவலரணில் பணியாற்றும் மற்றுமொரு படைவீரர் மீதும் சினைப்பர் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் அவருக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. (ச-8,4)

## கண்காணிப்புக்குழுத் தலைவர் நாளை கிளிநொச்சி பயணம்

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ருப் ஹொக்லண்ட் நாளை வியாழக்கிழமை கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இச்சந்திப்பு முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெறவுள்ளது.

கதிர்காமரின் கொலை, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்லும் வீதிகள் மூடப்பட்டமை, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அரசியல் பணிகளுக்காக செல்லும் விடுதலைப் புலிகளை படையினர் தடைசெய்துள்ளமை ஆகியவை குறித்து இச்சந்திப்பில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-4,8)

## இளைஞன் சுட்டுக்கொலை

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டம் நாமல் பொக்கண கிராமத்தில் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினமிரவு வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

சுடப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த மாதவராசா பிரபு என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்விளைஞன் மேலும் இருவருடன் வயலுக்குச் சென்று வீடு திரும்பும் பொழுது இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (து-4)

## அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாம்

### அமைச்சர் பெர்னான்டோ புள்ளே தகவல்

(கொழும்பு)

கொலைசெய்யப்பட்ட வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு ஏற்கனவே கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக அமைச்சர் ஓகஸ்ட் மாதம் முழுவதும் பாராளுமன்றத்திலிருந்து விடுமுறை எடுத்திருந்தார் என வர்த்தக விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

கடந்த 8 ஆம் திகதி தொலைபேசி மூலம் தன்னைத் தொடர்பு கொண்ட அமைச்சர் கதிர்காமர், இம்மாதம் முழுவதும் தனது (12 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் பொலிஸார் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இருதயபுரம் சந்தியில் நேற்றிரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இரண்டு பொலிஸார் காயமடைந்துள்ளார்கள்.

ஜெயந்திபுரம் பொலிஸ் காவல் நிலையத்திற்கு முன்னுள்ள காப்ப (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியுடன் இந்தியக் குழுவினர் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முஹர்ஜி ஆகியோர் ஜனாதிபதி சந்திரிகாவினை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இச் சந்திப்பின்போது இரு அமைச்சர்களும் அமைச்சர் கதிர்காமரின் கொலையின் அனுதாபத்தினை தெரிவித்துக்கொண்டனர்.

அத்துடன் இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி அனுப்பிய அனுதாபக் கடிதத்தையும் கையளித்தனர்.

அத்துடன் இலங்கைக்குத் தேவைப்படும் உதவிகளையும் வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தனர்.

இந்திய அமைச்சர்கள் இருவரும் கொலைசெய்யப்பட்ட அமைச்சர் கதிர்காமரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்வதற்காகக் கொழும்பு வந்த சமயமே இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (ச-8)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349
011-2372952-3, 011-2360290, 011 - 2360291
e.mail:-jaffna@expoavi.com,reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை..



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பயங்கரவாதத்திற்கு எதிராக தடைகளை விதிக்க வேண்டும்

## வெளிநாட்டு பிரமுகர்களிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு எதிராக நடைமுறை சாத்தியமானதும் வினைத்திறன் மிக்கதுமானவகையில் சர்வதேச சட்டங்களின் விதப்புரையினை பயன்படுத்தும் தேவையை வெளிவிவகார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இதன்போது பயங்கரவாதத்திற்கு எதிரான தடைகளை விதிப்பதும் உள்ளடக்கப்பட வேண்டும் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எச்.எம்.ஜி.எல்.பிரியங்கா தெரிவித்துள்ளார்.

அவைபோன்று இவ்வாறான அமைப்புக்களின் செயற்பாடுகள் சர்வதேச ரீதியாக இல்லாமல் செய்வது அவசியமாகும்.

வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமா படுகொலை தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகள் குறித்து இராஜதந்திரிகளுக்கு இதன்போது விளக்கமளிக்கப்பட்டது. (ந-4)

## முன்பள்ளி அமைக்க நடவடிக்கை

(மருதங்கேணி)

புலோலி தெற்கு புற்றலை பிள்ளையார் கோவில் வளாகத்தில் 20 இலட்சம் ரூபா செலவில் முன்பள்ளி அமைப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

இதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருவதாக நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர். (ந-35)

## தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

(கொழும்பு)

அரசாங்க சேவையில் தற்காலிக அடிப்படையில் கடமையாற்றி வரும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று அண்மையில் பொது நிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சுக்கள் திணைக்களங்கள், மற்றும் மாகாண சபைகள் ஆகியவற்றுக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

இம்மாதம் முதலாம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் படி அரசாங்க சேவையில் தற்காலிக, ஒப்பந்த, பதில் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட அடிப்படையில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டவர்களில் யூலை மாதம் முதலாம் திகதி சேவையில் 180நாட்களைப் பூர்த்தி செய்துள்ள ஊழியர்களுக்கே நிரந்தர நியமனம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்ப பதவிக்கான தகைமைகளை முழுமையாகக் கொண்டவர்களே சேவையில் நிரந்தரமாக்கப்படவுள்ளனர் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (து-2)

# சமாதானத்தை முன்கொண்டு செல்லாமையே கதிர்காமரின் கொலைக்குக் காரணமாகும்

## ஐ.தே.கட்சி ராஜித சேனாரத்தின தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பற்றுள்ள கட்சி என்ற வகையில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலை தொடர்பில் உண்மையிலே கவலைப்படக்கூடியது ஐக்கியதேசியக் கட்சியே என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்தின தெரிவித்துள்ளார்.

கிறில்லா அமைப்புக்களின் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துவதாயின் அவர்களுடன் சிற்சில உடன்பாடுகளுக்குச் செல்ல வேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் யுத்த நிறுத்தத்திற்கு வந்து 2அரை ஆண்டு காலமாக நாட்டில் அமைதியான சூழலை தோற்றுவித்தது.

42 ஆயிரத்திற்கும் அதிகமான பாதுகாபபுத் தரப்பினரின் மரணம் 641வரை குறைக்கப்பட்டது. இதில் 600பேர் வரை கூட்டமைப்பு அரசாங்கம் பதவிகGு வந்த பின்னரே கொலையுண்டுள்ளனர்.

மிகச்சிறப்பாக தமிழீழ விடுதலைப்புலிகளைக் கட்டுப்படுத்தப் போவதாக மக்களுக்கு வாக்களித்து பதவிக்கு வந்த அரசாங்கம் இவற்றிக்கு பதில்சொல்ல வேண்டும்.

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தின் பதவிக்காலத்தில் லக்ஷ்மன் கதிர்காமரின் பாதுகாப்பிற்கு அதிகூடிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. எனவும் யுத்தநிறுத்தத்தின் மூலம் வீதித் தடுப்புக்கள் நீக்கப்பட்டு இயல்பு நிலை கொண்டுவரப்பட்டதே. இதற்கு காரணம் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவிக்கின்றது.

எனினும் மத்திய வங்கி கெஸநாவ எண்ணைக் கொள்கலம் ரெலிக்கொம் முதலான தாக்குதல்களுக்காக குண்டுகள் கொண்டுவரப்பட்டது வீதித் தடுப்புக்கள் இருந்தபோதே சமாதான நடவடிக்கைகளை முன்கொண்டுவர எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணி இதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

சமாதானத்தை முன்கொண்டு செல்லாமை இதற்கு முக்கிய காரணம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

## இராசி பலன்

17 .08.2005
(ஆவணி 01, புதன்கிழமை)
துவாதசி காலை 07.52 மணிவரை
திரியோதசி பின்னிரவு 5.32 மணிவரை
பூராடம் பிற்பகல் 12.32 மணிவரை
இராகுகாலம் 12.05 - 1.35 மணிவரை
சுபநேரம் 04.35 - 06.05 மணிவரை
பிரதோச விரதம்

| | |
|---|---|
| மேடம் | கட்டுப்பாடு, சரீரப்பிரயாசை, எதிர்பாராத செலவு, காரிய தாமதம். |
| இடபம் | மனக்கவலை, பொருள்விரயம், காரிய தாமதம், அஜீரணக்கோளாறு. |
| மிதுனம் | கீர்த்தி, மனோ தைரியம், காரிய அனுகூலம், போசன சுகம். |
| கடகம் | ஆரோக்கியம், முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை, கீர்த்தி. |
| சிங்கம் | பணக்குறைவு, காரிய இடையூறு, வியாபார நன்மை, உடல்நலக் குறைவு. |
| கன்னி | மனச்சஞ்சலம், தனவிரயம், முயற்சி தாமதம், ரோகநிலை. |
| துலாம் | நற்கீர்த்தி, இஷ்டசித்தி, உற்சாகம், ஆரோக்கியம். |
| விருச்சிகம் | அதிகசெலவு, மனோசங்கடம், போசன சுகக்குறைவு, ரோகநிலை. |
| தனுசு | வெகுமானம், நண்பர்கள் சந்திப்பு, சயன சுகம், முயற்சி கைகூடும். |
| மகரம் | சோம்பல் நிலை, காரிய இடையூறு, தனவிரயம், வீண் மனஸ்தாபம். |
| கும்பம் | ஆனந்தம், நண்பர்கள் சந்திப்பு, பணவருவாய், காரிய நன்மை. |
| மீனம் | பிரபுத்தனம், நன்கொடை, காரிய சித்தி, உறவினர் சந்திப்பு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- .வளவன்

## ஆண்டுக்கு 10 இலட்சம் உல்லாசப்பயணிகள் என்ற இலக்குடன் சுற்றுலாத்துறை அபிவிருத்தி

(கொழும்பு)

நாட்டின் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு சுற்றுலாத்துறை அமைச்சும் இலங்கைச் சுற்றுலாச்சபையும் கூட்டாகத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த உள்ளன.

350கோடி ரூபா செலவில் இத்துறையின் உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தி செய்யப்படும் கைத்தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க இதுபற்றி தெரிவிக்கையில், உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்ய இதற்கு முன்னில்லாதவாறு நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறினார்.

இந்தத் திட்டத்திற்கு அமைய நீர்கொழும்பு ஒல்லாந்தர் கால்வாய் நுவரெலிய கிரிகரி வாவி ஆகியன புனரமைக்கப்பட்டு சுற்றுலாத்துறை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

கண்டியில் புதிதாக ஹோட்டல் பயிற்சி நிலையமும் நிறுவப்படும் அத்துடன் சிகிரியாவுக்குச் செல்லும் வீதிகளும் திருத்தி அமைக்கப்படும்.

2020ஆம் ஆண்டளவில் நாட்டிற்கு 10இலட்சம் உல்லாசப் பிரயாணிகளை வரவழைப்பது என்ற இலக்கை நாடி இலங்கை செயற்பட்டு வருவதாக அமைச்சர் அனுரா பண்டார நாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (அ-7)

## தாயையும் மகளையும் கொன்ற யானை சுட்டுக் கொல்லப்பட்டது

(அம்பாறை)

அம்பாறை நகரில் துவசம் செய்த காட்டு யானை ஒன்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளது.

இந்த யானை நேற்று முன்தினம் அம்பாறை நகருக்கு சென்ற மக்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்தமையால் நகரில் அமைதியின்மை காணப்பட்டது.

இந்தநிலையில் யானையின் தாக்குதலில் தாயும், மகளும் உயிரிழந்துள்ளதுடன் இன்னும் 3 பேர் காயமடைந்துள்ளனர்.

நகரின் பல வீடுகளுக்கும் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றுக்கும் இந்த யானை சேதம் விளைவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் பின்பு வீடொன்றிற்குள் புகுந்து குழந்தை ஒன்றைத் தாக்க முற்பட்ட வேளையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரத்துநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலையில் இருந்து இந்த யானை மீண்டும் காட்டிற்கு விரட்டுவதற்கு முயற்சி எடுத்ததாகவும் தெரிவித்துள்ளார். மனித உயிருக்கு பங்கம் விளைவிபபதற்கு முயற்சிக்கும் விலங்கை கட்டுப்படுத்துவதற்காக வனவிலங்கு சட்ட மூலத்தின் படி துப்பாக்கிப் பிரயோகம் செய்ய முடியும் என கிழக்கு மாகாண வனவிலங்கு பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (அ-9)

# வர்த்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சீனாவின் கன்ருன் நகரில் 2005 ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை வர்த்தகக் கண்காட்சி ஒன்று நடைபெற இருக்கின்றது. இக் கண்காட்சியில்பின்வரும் துறை சார்ந்த ஆர்வலர்கள் பங்குபற்றிக் கூடுதலான நன்மையடையலாம்.

அவையாவன இயந்திரங்கள், இயந்திர உற்பத்தி, இயந்திர உபகரணங்கள், உதிரிப்பாகங்கள், கட்டடப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், வாகனங்கள், வாகன உதிரிப்பாகங்கள், விவசாய இயந்திரங்கள், விவசாய உபகரணங்கள், கைத்தொழில் இயந்திரங்கள், கட்டட இயந்திரங்கள், உபகரணங்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், செரமிக் பொருட்கள், தளபாடஙகள், பாதணிகள், அன்பளிபபுப் பொருட்கள், மணிக்கூடுகள், ஆபரணங்கள், பாடசாலை உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், மின் உபகரணங்கள் ஆகியன அடங்கிய பன்னிரண்டாயிரம் காட்சியறைகள்.

இக் கண்காட்சியில் பங்குபற்ற விரும்பும் ஆர்வலர்கள் இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன் இல.165 மானிப்பாய் வீதியில் உள்ள யாழ். வணிகர் கழகத்துடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் யாழ்.வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது. (அ)

# பௌத்த பிக்குகளுக்கு வாகன சாரதி உரிமம் பெற உரிமை இல்லையா?

## மேல்முறையீட்டு நீதிமன்றில் மனு

வாகன சாரதி உரிமம் ஒன்றை பெறுவதற்கு பௌத்த பிக்குகளுக்கு சட்டரீதியாகவோ அல்லது ஒழுக்க நெறியாகவோ தடைகள் எதுவும் கிடையாது எனவும் வாகனச் சாரதி உரிமம் ஒன்றினை வழங்குவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் மறுப்பு தெரிவித்தது சட்டவிரோதமானது எனவும் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு பற்றிக கருத்துத் தெரிவித்த வண.உலபனே பங்கானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஒரு வாகன சாரதி உரிமம் பெறுவதற்குத் தனக்கு அனைத்துத் தகுதிகளும் உள்ளன என்றும் மோடடார் போக்குவரத்து ஆணையாளர், பௌத்தசமய விவகாரங்களுக்கான ஆணையாளரிடம் ஆலோசனை பெற்றுத் தனது மனுவை நிராகரித்திருக்கிறார், அது சட்ட விரோதமானது என்றும் கூறினார்.

மனுதாரர் மொரட்டுவவில் ஒரு வித்தியாலய ஆசிரியர் எனவும், அவரது சிறிய சம்பள்த்தில் ஒரு சாரதியை நியமிக்க முடியாதென்றும் அவருக்கு அன்றாட மத அலுவல்களுடன் ஆயுள்வேத வைத்தியத்துறை அலுவல்களும் உள்ளன என்றும் அவரது சட்டத்தரணி தெரிவித்தார்.

மேன்முறையீட்டு நீதி மன்றம் இவ்விசாரணையை செப்டம்பர் 14ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது. (து-6)

# கொலையாளிகள் மறைந்திருந்த வீட்டில் பணிபுரிந்தோருக்கு பொலிஸார் வலைவிரிப்பு

லக்ஷ்மன் கதிர்காமரைப் படுகொலை செய்த கொலையாளிகள் மறைந்திருந்த அயல்வீட்டில் வீட்டுப்பணிகளுக்கென வந்து சென்ற 7 தமிழ் இளைஞர்களைக் கைது செய்வதற்கு பொலிஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

இந்த தமிழ் இளைஞர்கள் கடந்த ஒரு வருட காலமாக வீட்டு வேலைகளுக்கு என மாறிமாறி வந்துள்ளனர். இவர்கள் அவ் வீட்டில் மிக குறுகிய காலமே பணியாற்றியுள்ளனர். இதேவேளை, பகல்வேளைகளிலேயே இந்த வீட்டிற்கு வந்துசென்றுள்ளனா எனப் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

வேலைக்காரர்களின் போர்வையில் கொலையாளிகள் இங்கு வந்து உளவு பார்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அமைச்சரைக் கொலைசெய்த கொலையாளிகள் தங்கியிருந்ததாகக் கூறப்படும் வீட்டு உரிமையாளரும் அவரின் மனைவியும், தங்களுக்கு மேல்மாடியில் நடந்த எதுவும் தெரியாததென்று கூறியுள்ளனர். எனினும் அவர்களின் கூற்றை ஏற்கமுடியாதென பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதுவரை பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து கொலையாளிகள் அமைச்சரைக் கொலைசெய்ய இரண்டு இடங்களில் மறைந்திருந்து தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளனர்

குளியலறையிலிருந்து தாக்குதல் நடத்துவதென்றும் அது தவறினால் மொட்டைமாடியிலிருந்து தாக்குதல் நடத்துவதென்றும் இவர்கள் திட்டமிட்டிருந்தனர். எனினும் அங்கிருந்து பார்க்கும்போது நீச்சல்குள இலக்கை தெளிவாக பெற்றுக்கொள்ள உயர்ந்து வளர்ந்துள்ள மரங்கள் தடையாக இருந்துள்ளன.

இந்த மரங்களின் கிளைகள் வெட்டி அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. இது குறித்து வீட்டு உரிமையாளரிடம் வினவியபோது வீட்டுத்தோட்டத்தை துப்புரவுசெய்த நபர் அதனை வெட்டியிருக்கலாம் எனக் கூறியுளளனர். தாக்குதலை மேற்கொண்ட கொலையாளிகள் மேல்மாடியிலிருந்து குதித்து தப்பியுள்ளனரென பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-4)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்தேற்றல்

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட கொக்குவில் பிரதேசத்தில் கீழ்வரும் இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி தடுப்பூசி மருந்து ஏற்படவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம்திகதி முற்பகல் 9.00 மணி தொடக்கம் 10.30 மணிவரை தாவடி தெற்கு காளிகோவிலடியிலும், முற்பகல் 10.45 தொடக்கம் பிற்பகல் 12.30 வரை கொக்குவில் மேற்கு பாரதி ச.ச.நிலையத்திலும், பிற்பகல் 12.45 தொடக்கம் 2.30 வரை கொக்குவில் மேற்கு அம்பாள் ச.ச. நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

26ஆம் திகதி முற்பகல் 9.00 தொடக்கம் 10.30 வரை கொக்குவில் மேற்கு காந்திஜி ச.ச.நிலையத்திலும்,10.45 தொடக்கம் பிற்பகல் 12.30 மணிவரை பூநாறி ஒழுங்கை கலைவாணி சன ச.சநிலையத்திலும் 12.45 தொடக்கம் 2.30வரை கொக்குவில் கிழக்கு கொக்குவில் ச.ச. நிலையத்திலும் இத்தடுப்பூசிபோடப்பட்வுள்ளது. (ற2)

# பயங்கரவாதத்துக்கு எதிராகத் திரள சர்வதேச மக்களுக்கு வேண்டுகோள்

பயங்கரவாத செயல்களை ஒழிப்பதற்கு உலகின் அனைத்து மக்களும் நிபந்தனையின்றி ஒனறுசேர வேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் அனைத்து இனமக்களும் அமைதியாக ஒன்றுசேர்ந்து வாழவேண்டும் என்று கூறிய அமைச்சர் லக்ஷ்மன் கதிர்கமர், கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருப்பதன் மூலம் உலகம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் இதுவாகும் என்றார்.

கொழும்பு சுதந்திரசதுக்கத்தில் இடம்பெற்ற அமைச்சர் கதிர்காமரின் இறுதிக் கிரியையின்போது இரங்கல் உரை நிகழ்த்தியபோதே பிரதமர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

தற்போதைய துன்பகரமான நிலையில் பேதங்களை மறந்து அனைத்து மக்களும் பயங்கரவாதத்தின் அனைத்து வடிவங்களுககும் எதிராக எழுந்து நிற்கவேண்டும் என்று அவர் சர்வதே சமூகத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (து-2)

# கதிர்காமரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது

## பிரதமர் இரங்கல்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் கொலையைத் தாம் வன்மையாக கண்டிப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதுவிடயம் தொடர்பில் பிரதமர் மேலும் தெரிவிக்கையில்,

பாதுகாப்புப்படையினரின் தகவல்களின்படி தமிழீழ விடுதலைப் புலிகளே இக் கொலை செய்துள்ளனர். நாட்டில் சமாதானத்தில் முயற்சி எடுக்கப்பட்டிருக்கும் இந்த தருணத்தில் கதிர்காமரின் மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ற-8)

# மின்சார தகன வசதியை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரின் மத்தியில் இந்து மக்கள் நீண்டகாலம் சூடுகாடாகப் பயன்படுத்திவரும் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் மின்சார தகனவசதியை அமைத்து தருமாறு கண்ணாடிப்பிட்டி மயான அபிவிருத்திசபை அரசாங்க அதிபரைகோரியுள்ளது.

யுத்த காலத்தில் கட்டுமானங்கள் முற்றாக அழிவடைந்த நிலையில் சாவகச் சேரி நகர சபையுடன் இணைந்து பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜின் உதவியுடனும் மறுசீரமைப்பு பணிகள் இடம்பெற்றுவருகின்றது.

நகரில் குடி நெருக்கப்பகுதி அண்மியதாகவுள்ளதால் புகை, சிரமம், அசௌகரியங்கள் ஏற்படுவதோடு விறகுத்தட்டுப்பாடும் தற்போது ஏற்பட்டுள்ளமையினால் மின் தகன வசதியினை அமைத்துத்தருமாறு கோரப்பட்டுள்ளது. (ற-21)

# லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை பற்றி நோர்வே அரசுடன் பேச்சு

விடுதலைப்புலிகளின் படுகொலை முயற்சிகளை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைக்குமாறு இலங்கை அரசாங்கம் நோர்வேயிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

நேற்று நோர்வே வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரை சந்தித்துப் பேசியபோது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது இவர்கள் இருவரும் இலங்கையின் தற்போதைய நிலை பற்றி ஆராய்ந்தார்கள். போர்நிறுத்த உடன்படிக்கை எதிர்கொண்டுள்ள அவலங்கள் குறித்தும் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

நோர்வே வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துப் பேசியிருக்கிறார் .

இந்தச் சந்திப்பில் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலைசெய்யப்பட்டமை குறித்துக் கவனம்செலுத்தப்பட்டதாக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. (து-2)

# பயணியின் வயிற்றுக்குள் ஹெரோயின் பைக்கற்றுகள்

(கொழும்பு)

ஹெரோயின் போதைப்பொருளைத் தனது உடலில் மறைத்து வைத்திருந்த பாகிஸ்தான் பிரஜையை காவல்துறையினரின் போதை வஸ்து தடுப்புப் பிரிவினர் கைதுசெய்திருக்கின்றார்கள்.

நேற்று முன்தினம் பாகிஸ்தானின் கராச்சி நகரிலிருந்து கொழும்பு நோக்கி வந்த விமானத்தில் வந்த ஒரு பயணி தொடர்பாக சந்தேகம் ஏற்படவே போதைப்பொருள் தடுப்பு அதிகாரிகள் அவரைக் கைதுசெய்து நீர்கொழும்பு வைத்தியசாலையில் பரிசோதனைக்கு உட்படுததினர்.

அங்கு இடம்பெற்ற வைத்தியப் பரிசோதனைகளின்போது அவருடைய வயிற்றுக்குள் ஹெரோயின் பைக்கற்றுக்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு வைத்திய சிகிச்சைமூலம் ஹெரோயின் பைக்கற்றுக்கள் எடுக்கப்பட்டன

அந்த ஹெரோயினின் பெறுமதி 12 இலட்சத்துக்கும் அதிகம் என்று காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

ஹெரோயினைப் பொறுப்பேற்கச் சென்ற 2 சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக காவல்துறையின் போதைவஸ்து தடுப்புப் பிரிவின் பணிப்பாளரும் சிரேஷ்ட காவல் துறை அத்தியட்சகருமான ஆனந்த ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார். (து-2)

# மேலும் 2 சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலை தொடர்பாக மற்றும் 2 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டவர்களுடன் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்களின் எண்ணிக்கை 48 ஆக அதிகரித்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

ஒரு சிலர் வத்தளைப் பிரதேசத்தில் பிடிப்பட்டார்கள். ஏனையோர் கொழும்பு நகரில் சிக்கினார்கள் என அவர் கூறியுள்ளார். பொலிஸாரும், இராணுவ வீரர்களும், விசேட அதிரடிப்படையினரும் கொலையாளிகளைத் தேடிக்கண்டுபிடிக்கும் தீவிர முயற்சியில் ஈடுபட்டிருக்கின்ளனர். (து-2)

# ஆங்கிலக் கல்லூரியை நிறுவ கியூமெடிக்கா முன் வருகை

(பொன்னாலை)

ஜேர்மன் சர்வதேச தொண்டு நிறுவனமான கியூமெடிக்கா நிறுவனம் மானிப்பாயில் சர்வதேச ஆங்கிலக் கல்லூரி ஒன்றை நிறுவ முன்வந்துள்ளது.

இக்கல்லூரியை நிறுவுவதற்கென கியூமெடிக்கா நிறுவனம் சுமார் 100 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியிருப்பதாக அந் நிறுவனத்தின் வடபகுதி இணைப்பாளர் சாம் ராஜசூரியர் தெரிவித்துள்ளார்.

இக்கல்லூரியில் ஆரம்பக்கட்டமாக தரம்1 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களே உள்வாங்கப்படுவர் என்றும், தொடர்ந்து மேல்நிலை மாணவர்கள் கட்டம் கட்டமாக உள்வாங்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கல்லூரியில் ஆங்கில பாடத்தினைப் போதிப்பதற்குத் தகுந்த ஆங்கில பட்டதாரிகளிடமிருந்து கியூமெடிக்கா நிறுவனம் விண்ணப்பங்களை கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கல்லூரியை நிறுவுவதற்கான ஆரம்பகட்ட பூர்வாங்கப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் முழுமையான கட்டடப் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம்முதல் ஆரம்பிக்கப்படும் என்றும் வடபகுதி இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ற-49)

## ஆண்டுவிழா

(கொழும்புத்துறை)

சுண்டுக்குளி கிறீன்பீல்ட் விளையாட்டுக்கழகத்தின் 47 ஆவது ஆண்டுவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி குருஸோ வீதியில் அமைந்துள்ள மேற்படி நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

காலை சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் என்பனவும் மாலை ஆண், பெண், முதியவர்களுக்கான போட்டிகளும், இரவு 7.30 மணிக்கு கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. இதில் நடனம், பட்டிமன்றம், இசை நிகழ்ச்சி என்பன இடம்பெறவுள்ளது. (ற-51)

# அமைதியை நிலைநாட்டப் பாடுபட ஆண்டகை அழைப்பு

இலங்கையில் துரிதமாக அமைதியை நிலைநாட்டப் பாடுபடுவது அனைத்துப் பிரஜைகளினதும் முக்கியப் பொறுப்பாகும் என கொழுமபு மறைமாவட்டப் பேராயர் அதி வணக்கதது்க்குரிய ஒஸ்வல் கோமஸ் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மனிதனின் பெறுமதியை மதிப்பிட முடியாது எனவே அனைத்து மனிதர்களையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மடுமாதா திருப்பதியின் வருடாந்த உற்சவ இறுதி நாள்களில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுத்து உரையாற்றுகையில் பேராயர் கோமஸ் ஆண்டகை இவ்வாறு கூறியுள்ளார்.

அமைச்சர் லக்ஷ்மன் கதர்காமரை இழக்க நேர்ந்திருப்பது துரதிஷ்டவசமான சம்பவமாகும் என அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் விரைவில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என்று உரையாசி கூறும் நோக்கத்துடன் நடந்த மடுத்திருப்பதியின் வருடாந்த உற்சவமும் நேற்று முன்தினம் நிறைவுபெற்றது.

இந்த நிகழ்வில் சுமார் 4 இலட்சம் பக்தர்கள்வரை பங்கேற்றதாக மடு திருப்பதிக்குப் பொறுப்பான வண. பிதா லோப் பிலிப்படிகளார் தெரிவித்துள்ளார். (து-2)

# அக்கரைப்பற்றில் கைக்குண்டு வீச்சு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் நேற்று முன்னிரவு அடையாளம் தெரியாத நபர்களினால் நடாத்தப்பட்ட கைக்குண்டு வீச்சுத் தாக்குதலில் விசேட அதிரடிப்படை வீரர் ஒருவரும் இராணுவத்தினர் மூவரும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த ஏனைய இருவரில் ஒருவர் பொலிஸ் கான்ஸ்டபிள் எனவும், மற்றவர் ஊர்காவல்வீரர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் மூவரும் பாதுகாப்புக் கடமையில் இருந்த சமயம் இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

தாக்குதலினை நடாத்திய நபரை நோக்கி பதில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட போதிலும் அவர்கள் தப்பிச்சென்றுவிட்டதாக அக்கரைப்பற்றுப்பொலிஸார் தெரிவித்தனர். (து-4)

# இன்று ஒரு தகவல்

## குழந்தையின் கூச்சம்

ஒருவர் "சார்... ஒரு இலக்கியக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் நீங்கள் அவசியம் வந்து பேசவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். "வேண்டாம் நான்கு பேருக்கு முன்னால் வந்து நிற்பது என்றால் எனக்கு மிகவும் கூச்சமாக இருக்கும்" என்றேன். "என்ன சார் இது... இன்னமும் குழந்தை மாதிரி கூச்சப்படுகிறீர்களே "என்றார் அவர். அவரை ஒரு மாதிரியாக சமாளித்து அனுப்பி வைத்துவிட்டு அதற்குப் பின்பு அதைப் பற்றி யோசித்துப்பார்த்தேன். சில நிபுணர்கள் எழுதி இருப்பதைப்படித்தும் பார்த்தேன்.

மனோதத்துவ நிபுணர்கள் என்ன சொல்கின்றனர் தெரியுமா 10முதல் 20 சதவீதம் வரையான குழந்தைகள் பிறக்கும் போதே கூச்ச சுபாவம் கொண்டதாகத்தான் இருக்கிறதாம். ஒரு தாத்தா தனது பேரப்பிள்ளையை ஆசையாகக் கூப்பிடுகிறார் விளையாட்டுக்காட்ட. அவன் அழுது கொண்டே ஓடிப் போகிறான். ஒரு பெண்மணி தனது பிள்ளையை பள்ளிக் கூடத்தில் சேர்ப்பதற்காகக் கூட்டிச் செல்கிறார். அந்தப் பிள்ளை அம்மாவின் முந்தானையில் ஒளிந்துக்கொண்டே வெளியே வரமாட்டேன் என்கிறது. இவர்களையெல்லாம் எப்படி சமாளிப்பது?

குழந்தைகளின் கூச்ச சுபாவத்தை போக்குவது எப்படி இதற்கு சில நிபுணர்கள் சில யோசனைகளை சொல்லியிருக்கிறார்கள். மற்றவர்களுக்கு முன்னால் "என் மகனுக்கு கூச்சம் மிகவும் அதிகம் சார். மற்றவர்களைப் பார்த்தால் மிகவும் வெட்கப்படுகிறான் சார்" என்று கூறும் அப்பாக்கள் உண்டு. "என் மகன் புதுமனிதர்களைப் பார்த்தால் அட்டை போல ஒட்டிக் கொள்வான் சார்" என்று கூறும் அப்பாக்களும் உண்டு.

இப்படியெல்லாம் குழந்தைகளுக்கு முத்திரை குத்துவது மிகவும் தப்பு. புதிதாக யாராவது வீட்டிற்கு வந்தால் குழந்தை தானகவே தனது கூச்சத்தையும் பயத்தையும் போக்கிக் கொண்டு சகஜமாக மாறிவருவதற்கு வாய்ப்புக் கொடுங்கள். ஒரு கூட்டத்திற்கோ அல்லது உறவினரின் திருமணத்திற்கோ குழந்தையை அழைத்துச் செல்கிறீர்கள். அங்கு போய் கட்டாயப்படுத்தி குழந்தையை மற்றவர்களுடன் பேசச் சொல்லாதீர்கள். சில சமயம் குழந்தை தாணாகவே தனது கூச்ச சுபாவத்தை விடுத்து பேசுவதற்கு முன்வந்தால் அதைப் பாராட்டுங்கள். குழந்தை கல கலப்பில்லாமல் மௌனமாக இருந்தால்... அதையும் கண்டு கொள்ளாதீர்கள்.

குழந்தை பேச ஆரம்பித்தால் அதை ஆர்வத்தோடு கவனிக்கத் தெரியவேண்டும். கலந்துரையாடும் பழக்கத்தை வீட்டிலேயே ஆரம்பிக்கவேண்டும். "கேட்டதற்கு பதில் சொல் என்று அதிகாரம் செய்துகொண்டிருந்தால் குழந்தைக்குப் பேசும் சந்தர்ப்பம் குறைந்துவிடும். கேலி செய்யும் பழக்கம் குழந்தைகளை மிகவும் பாதித்துவிடும். பெரியவர்களானதற்குப் பின்பும் சிலர் கூச்சத்துடனும் பயத்துடனும் இருப்பதற்கு இது தான் காரணம். சிறுவயதில் அவர்கள் எல்லாம் ஏதாவது கேலிக்குள்ளாகியிருக்கலாம். இரண்டாவது குழந்தை, மூத்த குழந்தையை கேலிக்கு ஆளாக்கும் சந்தர்ப்பங்களைக் கண்டு கேலிசெய்தால் இளம் நெஞ்சங்களை விட்டு நீங்குவதில்லை. எப்போதும் குழந்தையின் நடை, உடை, பாவனைகளைப்பற்றி சொல்லிக்கொண்டிருக்காதீர்கள். அதுவே கூச்ச சுபாவத்தைக் கொண்டு வந்து விடும்.

அப்பா எங்கே என்று யாராவது கேட்டால் என்ன காரியத்திற்கு எங்கே போயிருக்கிறார் எத்தனை மணிக்கு திரும்பி வருவார் என்று சொல்லும் அளவிற்கு குழந்தைகளைப் பழக்கப்படுத்தி வைக்கவேண்டும். தொலைபேசியில் யாராவது விசாரித்தால் கூட இப்படி பதில் கூறு என்று சொல்லவேண்டும். சின்னச்சின்ன மீற்றிங்கில் நான்கு வார்த்தை பேசுவதற்கு தயார் செய்து கொள்ளலாம்.

ஒரு கடையிலேயோ அல்லது விடுதியிலேயோ ஏதாவது விபரம் கேட்டக வேண்டுமானால் உங்கள் குழந்தையை தைரியமாக அனுப்புங்கள். குழந்தைகள் பணிவாகவும் பொறுமையாகவும் விபரம் கேட்கும் போது கூச்ச சுபாவம் போய்விடும்.

சிறுவயதிலேயே இப்படியெல்லாம் பழக்கப்படுத்தினால்த் தான் வருங்காலத்தில் தைரியமாக இந்த சமுதாயத்தில் வாழ முடியும். இல்லாவிட்டால் 60வது வயதிலும் அடுப்படியை விட்டு வெளியே வருவதற்கு கூச்சப்பட்டுக்கொண்டுதான் இருக்க வேண்டும். இந்தக்காலத்துப்பிள்ளைகள் எவ்வளவோ பரவாயில்லை. எதற்கும் தயங்குவதில்லை... கூச்சப்படுவதில்லை.

ஒரு தாயார் அடுப்படியில் இருந்து சத்தம் போட்டார். "எடே ராமு! தயவு செய்து அந்த ரீவியை நிறுத்து! அந்தப் பெண்ணின் குரல் மகா மோசம். அடுப்படியில் இருக்கும் என்னாலேயே அதை சகித்துக்கொள்ள முடியவில்லை என்றார்". உடனே மகன் கொஞ்சம் கூட தயங்காமல் பதில் சொன்னார். "அம்மா... இந்தக் குரல் ரீவியில் இருந்து வரவில்லை எதிர் வீட்டு மாமி இங்கே வந்திருக்கிறார். அவர் தான் இப்போது என்னுடன் பேசிக் கொண்டிருக்கிறார்" என்றான்.

தென்கச்சீ கோ. சுவாமிநாதன்

# உலகில் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு அனைத்து நாடுகளும் ஒன்றிணைய வேண்டும்



## பிரதமர் மஹிந்த வேண்டுகோள்

(கொழும்பு)

பயங்கரவாதத்தினைத் தடுப்பதற்கு உலகத்தின் அனைத்து இனத்தவர்களும் நிபந்தனையின்றி ஒருங்கிணைய வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கையின் அனைத்து இன மக்களும் அமைதியாக ஒன்று சேர்ந்து வாழ வேண்டுமென்று கூறிய அமைச்சர் கதிர்காமர் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருப்பதன் மூலம் உலகம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் இதுவாகும் என பிரதமர் தெரிவித்தார். கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்ற அமைச்சர் கதிர்காமரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு இரங்கல் உரை நிகழ்த்திய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய துன்பகரமான சூழ்நிலையில் பேதங்களினை மறந்து அனைத்து மக்களும் பயங்கரவாதத்தின் அனைத்து வடிவங்களுக்கும் எதிராக ஒன்று திரள வேண்டும்.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவின் மீதும் கடந்த ஜூலை 7ஆம் திகதி இலண் டன் நகரிலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸ ஆகியோரும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் படுகொலை செய்யப்பட்டமை போன்ற சம்பவங்கள் அனைத்தும் ஒரே மாதிரியானவை.

கிழக்கிலும் மேற்கிலும் அபிவிருத்தி அடைந்த அடைந்து வரும் நாடுகளும் பயங்கரவாதத்தினை ஒழித்துக் கட்டி ஜனநாயக வாழ்க்கையின் விழுமியங்களை வலுப்படுத்த கைகோர்க்க வேண்டும்.

அமைச்சர் கதிர்காமர் அனைத்து இலங்கை மக்களினதும் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு அவர் பெரும் பங்காற்றியவர். இனப்பிரச்சினையின் உண்மையான தோற்றத்தினை உலகிற்கு எடுத்துக் காட்ட அவர் மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டத்தக்கவை.

இலங்கையில் எந்த இனங்களையும் சேர்ந்த மக்கள் வாழ்ந்தாலும் அவர்கள் அனைவரும் இலங்கையர்கள் என்பதை அங்கீகரித்த கதிர்காமர் தேசத்திற்காக ஆற்றிய பணிகள் வெற்றியளித்திருப்பதை வெளிநாட்டுத் தலைவர்களின் சோகத்திலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது எனவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (ரு-4)

# ஜனாதிபதியை ஓரங்கட்ட முயற்சி?

(கொழும்பு)

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மாநாட்டில் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பேர் அறிவிக்கப்பட்ட பின்னர் கட்சிக்குள் ஜனாதிபதி சந்திரிகாவை ஓரங்கட்டும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலேயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஊடகம் ஒன்றில் நேற்று முன்தினம் செய்திவெளியிட்டுள்ளது.

இதற்கென அமைச்சர்கள் மங்கள சமரவீர, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஆகியோரின் உதவி பிரதமருக்குக் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியை கட்சியில் இருந்து ஓரங்கட்டிவிட்டு கட்சியின் தலைமைத்துவத்தை பிரதமர் ஏற்றுக்கொள்ளும் இந்தத் திட்டம் குறித்து தற்போது ஆராயப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி கட்சியின் மாநாட்டில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படும் வரை இந்த விடயம் சம்பந்தமாக மௌனம் சாதிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் கட்சியின் அனைத்து அமைப்பாளர்கள் இளைஞர், அமைப்புகள் மகளிர் அமைப்புக்கள் என்பவற்றின் ஆதரவைப்பெற்று கொள்வது என்றும் கட்சி மாநாட்டின் போது பிரதமரை கட்சியின் உப தலைவராக அறிவிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு கட்சிப் பொதுச்செயலாளரின் ஆதரவு முக்கியம் என்பதால் இது குறித்து கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இணக்கம் கிடைத்தாலும் இல்லாவிடினும் 6ஆம் திகதி கட்சி மாநாட்டின் பின்னர் ஜே.வி.பியுடன் ஜனாதிபதித்தேர்தல் சம்பந்தமாக பேச்சுவார்த்தைகளை நடத்தி ஒரு உடன்பாட்டிற்கு வருவது என்றும் பிரதமர் தலைமையிலான குழு தீர்மானித்திருப்பதாகவும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

(ரு-4)

# சமாதானப் பேச்சுக்கள் மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய இக்கட்டான நிலையில்!

## ஜயந்த தனபால தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் தொடர்ந்து யுத்த நிறுத்த உடன்படிக்கையை முன்னெடுப்பதாக அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபால தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டில் ராஜதந்திரிகள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் யுத்த நிறுத்தம் தொடர்பான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பன குறித்து தீவிரமாக ஆராய்ந்துவருகிறோம்.

வெளிவீவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையினை அடுத்து நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதானப் பேச்சுவார்த்தை மறு பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய இக்கட்டான நிலை தோன்றியுள்ளது. இருந்தும் மக்கள் சமாதான பேச்சுவார்த்தை ஆரம்பிக்க வேண்டும் என்றே விரும்புகின்றார்கள்.

இந்தப்படுகொலையினை அடுத்தே அவர்கள் ஆத்திரமடையாமல் இருப்பதன் மூலம் சமாதானத்திற்கான தமது இறுதியான தீர்மானத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

மக்களின் இந்தப் போக்கிற்கு நாம் மதிப்புக் கொடுக்கின்றோம். அதன் அடிப்படையில் நாம் தொடர்ந்தும் யுத்த நிறுத்த உடன்படிக்கையினை கடைப்பிடிப்போம் எனவும் ஜயந்த தனபால மேலும் தெரிவித்துள்ளார். (ரு-4)

## கதிர்காமர் படுகொலை

# துப்புக்கள் துலங்குவதாக பொலீஸ் அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு புல்லேர்ஸ் லேனில் உள்ள லக்ஷ்மன் கதிர்காமரின் வீட்டில் இருந்து 100மீற்றர் தூரத்தில் உள்ள வீடு லக்ஷ்மன் தளயசிங்கம் என்பவரது. இவர் 1965 ஆம் ஆண்டில் கொழும்பு றோயல் கல்லூரி கிரிகெற் அணியின் கப்ரன் ஆவார். வயது 58. மனைவி பெயர் செல்வலோஜினி. இந்த வீட்டின் மேல் மாடியில் உள்ள கழிவறையின் துவாரம் ஒன்றில் இருந்து தான் சினைப்பர் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது என்று பொலிஸார் நம்புகின்றனர்.

சம்பவம் நடைபெற்ற 15 நிமிடங்களுக்குள் அங்கு அதிரடிப்படையினர் விரைந்து தேடுதல் நடத்திய போது கீழ் வீட்டில் தடையங்கள் எதுவும் இருக்கவில்லை. போதிய வெளிச்சம் இல்லை. அங்கு சில தடயங்கள் காணப்பட்டுள்ளன. நடைபாதையில் கிரனேட் காடறிஜ் காணப்பட்டது. குறித்த உயரம் அளவிடப்பட்டு செய்யப்பட்டது என்று நம்பும்படியான 7அடி உயரமுள்ள ஒரு முக்காலி இருந்தது. அதன் உச்சியில் ஆசனம். அதன் மீதிருந்தபடி கதிர்காமர் வீட்டின் நீச்சல் தடாகத்தை பார்க்கக்கூடியதாக அது வைக்கப்பட்டிருந்தது. நிலத்தில் ரவைக் கோதுகள் மூன்று வீசப்பட்டுக் கிடந்தன.

கழிவறைக்கு அருகே உள்ள அறை ஒன்றில் ஒரு கிரிகட் பை காணப்பட்டது. அதனுள் சொக்லேட்டுகள், சீஸ் கட்டிகள் ,கேக்துண்டுகள்,மென்பானம் ஒரு போத்தல் என்பன காணப்பட்டன. ஒரு முறுக்குப் பைக்கற்றும் காணப்பட்டது. வெள்ளி இரவு நடைபெற்ற சம்பவம் பற்றி வீட்டில் இருந்தவர்களுக்கு எதுவும் தெரியாது என்பதை தம்மால் நம்ப முடியவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தளையசிங்கம் குடும்பத்தினரை பொலிஸார் சனியன்று விசாரணைகளுக்காகக் கைதுசெய்துள்ளனர். இரவுப் பார்வைக் கண்ணாடிகள் பயன்படுத்தப்பட்டு 8.33 மீல்லி மீற்றர் துப்பாக்கியும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் நம்புகின்றனர்.

வீட்டின் பின்புற வளவில் இருந்து சில ஆயுதங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. விசாரணைகள் சி.ஐ.டியினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் கொழும்பில் இருந்து வரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

(சு-6)

நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்.
16.08.2005.

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளல்-2005

1. கடன் சான்றிதழாளர் நேரடியாக வருகை தந்து கடனை மீளப்பெற வேண்டும்.
2. ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் இருவரும் வருகைதர வேண்டும் அல்லது கடன்சான்றிதழாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கிராமசேவையாளர் வழங்கிய கடிதத்தைக்கொண்டுவர வேண்டும்.
3. கடன் சான்றிதழளார் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களை பின்னுரித்தாளர் கொண்டு வரவேண்டும்.
   - ❖ இறப்புச் சான்றிதழ்
   - ❖ இறப்புச் சான்றிதழின் படி (பிரதி)
   - ❖ கடன் சான்றிதழ்
   - ❖ பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்
   - ❖ பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம்.
4. கடன் சான்றிதழிலுள்ள முழுப்பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்திக் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.
5. அ) மீளளிப்பிற்குத் தேர்ந்தெடுக்கபட்ட கடன் சான்றிதழாளர் தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப்பெற முடியும்.

   ஆ) அடையாள ஆவணம் அற்றவர் தமது புகைப்படத்தின் (2.5அங்.×2.0அங். அளவு) பின்புறத்தில் தமது பெயர், முகவரி, கையொப்பம் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.
6. கடன்சான்றிதழைத் தவறவிட்டவர் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.
7. கடன் சான்றிதழாளரும் மறுஉரித்தாளரும் இறந்திருப்பின் சட்ட முறையான உரித்தாளருக்கு மீளளிக்கப்படும். சட்டமுறையான உரித்தாளர் ஒருவருக்கு மேற்படின் உரித்துடைய அனைவருக்கும் சேர்த்து வழங்கப்படும். உரித்துடையவர்களில் எவராவது ஒருவர் ஏனையோரின் எழுத்து மூலமான ஒப்புதலுடன் மீளப்பெற்றுக்கொள்ளலாம். அவ்வொப்புதல் கிராமசேவையாளராலும் உதவி அரசாங்க அதிபராலும் உறுதிப்படுத்தப்படவேண்டும். சட்டமுறையான உரித்தாளர் யார் என்பதை முறைப்படி உறுதிப்படுத்த வேண்டும்.

1 கடன்சான்றிதழாளரின் இறப்புச் சான்றிதழ்
2 மறுஉரித்தாளரின் இறப்புச் சான்றிதழ்
3 இரண்டினதும் படி
4 கடன்சான்றிதழ்
5 கடனை மீளப்பெறவுள்ளவரின் அடையாள ஆவணம்
6 கடனைப் மீளப்பெறவுள்ளவரின் கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கிராமசேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்
7 மறுஉரித்தாளரின் சட்டமுறையான உரித்தாளர் எத்தனை பேர் என்பதையும் யார் யாரென்பதையும் உறுதிப்படுத்திக் கிராமசேவையாளரும் உதவி அரசாங்க அதிபரும் வழங்கிய கடிதம்.

.........................................................................
*(யோ.தமிழ்க்குமரன்)*
*நிதிப்பொறுப்பாளர்,*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*
**16.08.2005**

## தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல் - 2005

**நிதித்துறை தமிழீழ விடுதலைப் புலிகள் .**
**மானிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவுகுலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்**

1.யா/மா/135 திரு. பொன்னையா சண்முகபாரதி
2.யா/மா/372 திரு. வேலாயுதம் ஜெகதீஸ்வரன்
3.யா/மா/ 466திரு. தம்பு சுப்பிரமணியம்
4.யா/மா/509 திரு. பொன்னுச்சாமி பாஸ் கரன்
5.யா/மா/517 திருமதி. கோமளாம்பாள் சுப்பிரமணியம்
6.யா/மா/620 திரு. முத்துத்தம்பி சந்திர லிங்கம்
7யா/மா/717 திரு. ஆசீர்வாதம் அமலதாஸ்
8.யா/மா/865 திருமதி. இராஜேஸ்வரி நகுலராஜா
9.யா/மா/ 978 திரு. காசித்தம்பி வடிவேலு
10.யா/மா/ 1012 திரு. அருளானந்தம் யேசுதாசன்
11.யா/மா/1366 திருமதி. சிவபாக்கியம் கனகசபை
12.யா/மா/1576 திரு. தில்லையம்பலம் யோகானந்தன்
13.யா/மா/1620 திரு. வல்லிபுரம் கதிரவேலு
14 யா/மா/1691 திரு. கணபதிப்பிள்ளை விநாயகமூர்த்தி
15.யா/மா/1710 திருமதி. மேரிமொறீன் ஜெயந்தகுமார்
16.யா/மா/ 1904 திருமதி. திலகேஸ்வரி லோகநாதன்
17.யா/மா/ 2304 திரு. நடராசா கந்தசாமி
18.யா/மா/ 2331 திருமதி. மேரிஸ்ரெலா எட்வேட்
19.யா/மா/2581 திரு. அந்தோனி பெனடிற்
20. யா/மா/2620 திரு. நடராசா குகதாசன்
21.யா/மா/2703திருமதி. பார்வதி செல்லையா
22.யா/மா/2811திரு. செலியூஸ் வேதநாயகம்
23.யா/மா/2827திரு. ஞானப்பிரகாசம் மரியயோசப் ஞானராசா
24.யா/மா/ 2895 திருமதி. அல்போஞ்சம்மா முத்துராசா
25.யா/மா/2912 திருமதி. இராசமலர் உருத்திரமூர்த்தி
26.யா/மா/3078திருமதி. லூசியாசொர்ணம் ஸ்ரனிசிலாஸ்
27.யா/மா/3253திரு. கவிரியேற்பிள்ளை சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை
28.யா/மா/3273திரு. மரியாம்பிள்ளை யோசேப்பு
29.யா/மா/3301திரு. ஜோசேப்பு அன்ரன்பிரான்சீஸ்
30.யா/மா/3467திரு. வல்லிபுரம் பெரியதம்பி
31.யா/மா/3586 திரு. இராசதுரை ஜெகதீஸ்வரன்
32.யா/மா/3855 திரு. ஐயாத்துரை தங்கராசா
33.யா/மா/3861திரு. சரவணமுத்து தம்பிமுத்து தெய்வேந்திரம்
34.யா/மா/3932திருமதி. மகேஸ்வரி சண்முகம்
35.யா/மா/3972 திரு. ஆறுமுகம் திருநாவுக்கரசு
36.யா/மா/4251 திரு. சிவக்கொழுந்துவிவேகானந்தன்
37.யா/மா/4273 திரு. நவரத்தினம் குலசிங்கம் (குண பாலன்)
38.யா/மா/4336திரு. சண்முகம் பரமேஸ்வரன்
39.யா/மா/4471திரு. இராசதுரை விக்னேஸ்வரன்
40.யா/மா/4532திரு. இராயப்பு டேவிட்
41.யா/மா/4533திருமதி. செல்வராணி யேசுதாஸன்
42.யா/மா/4574திரு. ஆசையர் செல்வராசா
43.யா/மா/4592திருமதி. குணமலர் பூபாலபிள்ளை
44.யா/மா/4657திரு. செருசலை சிங்கராசா
45.யா/மா/4790திரு. சிவம்பிள்ளை அலோசியஸ் இரத்தினம்
46.யா/மா/4860திரு. இராகவன் கருணாகரன்
47.யா/மா/4938 திருமதி. மேரியூபிரேசியா செங்கோல் ராஜா
48.யா/மா/4959திருமதி. அன்னலட்சுமி தணிகாசலம்
49.யா/மா/5489 திருமதி. இராசகுமாரி அன்ரன்விஜ யேந்திரன்
50.யா/மா/5529 திரு. சிதம்பரி சிவம்
51.யா/மா/5673திருமதி. பத்மாவதி அம்பலவாணர்
52.யா/மா/ 5699திருமதி. மீனலோஜனி சங்கரப்பிள்ளை
53.யா/மா/5745திருமதி. நாகேஸ்வரி தியாகராஜா
54.யா/மா/5851 திரு. தாமோதரம்பிள்ளை லோகேந்திரன்
55.யா/மா/5879 திரு. கந்தசாமி சிறீதரன்
56.யா/மா/5923திருமதி. சிவபாபக்கியம் சுப்பபையா
57.யா/மா/ 5963திரு. குருசாமி ராசகுமார்
58.யா/மா/5975திரு. செல்லையா பாஸ்கரன்
59.யா/மா/6148திருமதி. கமலா பன்னீர்ச்செல்வம்
60.யா/மா/ 6175திரு. யோசவ் மகேந்திரன்
61.யா/மா/6257திரு. சின்னசுவாமிசர்மாபாலசண்முகன்
62.யா/மா/6283திருமதி. யோகேஸ்வரி தர்மராஜா
63.யா/மா/6301திருமதி. மகேஸ்வரி தம்பையா
64.யா/மா/6345திரு. பாலசிங்கம் பாஸ்கரன்
65.யா/மா/6393திருமதி. சத்தியபாமா நவரத்தினம்
66.யா/மா/6435திரு. சிவசுப்பிரமணியம்சந்திரமௌலீசன்
67.யா/மா/6847திரு. நடராசா சுப்பையா ,
68.யா/மா/6880திரு. அருளப்பு தேவதாஸ்
69.யா/மா/6991திரு. வைரமுத்து செல்வம்
70.யா/மா/7005திருமதி. சத்தியலட்சுமி ஜெயசிங்கம்

.........................................................................
**(யோ.தமிழ்க்குமரன்)**
**நிதிப் பொறுப்பாளர்,**
**தமிழீழ விடுதலைப் புலிகள்**

# கொத்தணி பஸ்களின் தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

கொத்தணி பஸ் கம்பனிகளுக்குச சொந்தமான பஸ்களின் தொகையை 5 ஆயிரமாக அதிகரிப்பதற்குப் போக்குவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ளது.

தற்போது பழுதடைந்துள்ள ஆயிரம் பஸகளை திருத்தி அமைப்பதுடன் மேலும் ஆயிரம் பஸ்களை இந்திய கடன் உதவித் திட்டதகின் கீழ் கொள்வனவு செய்ய இருப்பதாகவும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கப் போக்குவரத்துத் துறையை விஸ்தரிக்குமாறு ஜனாதிபதி விடுத்திருந்த பணிப்புரைக்கமைய கிராமிய பாடசாலை பஸ்சேவைகள் ஒழுங்கு முறைப்படுத்தப்படவுள்ளன.

அதிகாலையிலிருந்து நள்ளிரவு வரை தினமும் பஸ் சேவைகள் நடைபெறும் வகையில் போக்குவரத்துச் சேவைகள் விஸ்தரிக கப்படவுள்ளன.

இலங்கைப் போக்குவரத்துச சபை மறுசீரமைப்பு தொடர்பான நகல் சட்ட மூலம விரைவில் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளது.

விருப்பத்தின் பேரில் ஊழியர்கள் ஓய்வு பெறும் திட்டமும் மீள் பரிசீலனை செய்யபபடவுள்ளது. சாரதிகள், நடத்துனர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் ஆகியோரைத் தவிர்ந்த ஏனைய தரங்களில் பணியாற்றும் ஊழியர்கள விருப்பத்தின் பேரில் ஓய்வு பெறுவதற்கு சநதர்ப்பம் அளிக்கப்படும் என்றும் தொிவிக்கப்பட்டுள்ளது. (ற-7)

# பால்மா விலை குறைப்பு

(கொழும்பு)

பால்மா மீது விதிக்கப்பட்ட வற்வரி நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அதன் விநியோகத்துடன் சம்பந்தப்பட்ட சகல நிறுவனங்களும் பால்மாவின் விலையைக் குறைத்துள்ளன என்று நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

மீளமைக்கப்பட்ட விலைகளை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரும்படி கடிதம் மூலம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அதிகாரசபை அறிவித்துள்ளது.

இம்மாதம் 5ஆம் திகதி தொடக்கம் விலை குறைப்பு இடம்பெற்றிருப்பது அவசியமாகும்

அதிகாரசபையின் தலைவர் எம்.ஐ.எம். முஸம் பொதுமக்களுக்கு விடுத்த வேண்டுகோளில், அதிகரித்த விலையில் பால்மாவை விற்பனை செய்யும் வியாபாரிகள் சம்பந்தமான தகவல்களை உடனடியாகத் தமக்கு அறிவிக்கும்படி கேட்டுள்ளார்.

பாலமா சம்பந்தமான புதிய விலைகள வரைவில் அறிவிக்கப்பட இருக்கின்றன. (து-2)

# நாட்டின் இறைமைக்கும் ஒருமைப் பாட்டுக்கும் அர்ப்பணிப்புடன் பாடுபட்டவர்

## கதிர்காமருக்கு அரசியல் கட்சிகள் புகழாரம்

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலார்கள் மாநாட்டில் உரையாற்றிய போது அமைச்சர் லக்ஷமன் கதிர்காமரின் படுகொலைக்குப் பொறுப்பானவர்களைச் சட்டத்திற்கு முன் நிறுத்துவதற்கு ஏதுவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சமாதானத்தை விரும்புபவர்கள் இந்தப் படுகொலையை வன்மையாகக் கணடித்திருக்கிறார்கள் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ இந்த மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையில், அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சகல சமூகத்தவர்கள் மத்தியில் சமாதானததுக்காகப் பாடுபட்டு வந்திருக்கிறார் எனறும்,

விடுதலைப்புலியினர் கதிர்காமரைக் கொன்றதன் மூலம் எதனையும் சாதிக்க முயன்றால் அது ஒருபோதும் கைகூடப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் தெரிவிக்கையில்,

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நாட்டின் இறைமைக்காகவும் ஒருமைப்பாட்டிற்காகவும் அாப்பணிப்புடன் பாடுபட்டு வந்த ஒருவர் என்று கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை சர்வதேச ஊடகங்களின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டிய தருணம் வந்துவிட்டது என்றும் அவர் குறப்பிட்டுளளார்.

சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வா அங்கு உரையாற்றிய போது,

தமிழீழ விடுதலைப்புலிகளின் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு முடிவு கட்ட சர்வதேசச் சமூகம் தலையிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அமைச்சர் மங்கள சமரவீர அந்த ஊடகவயலாளர் மாநாட்டில் பேசியபோது, ஆங்கில வார இதழ் பத்திரிகை ஒன்று அண்மையில் அமைச்சர் கதிர்காமரின் தனப்பட்ட பாதுகாப்பு சம்பந்தமாக செய்திகளை அவரின உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய வகையில் வெளியிட்டிருந்தது என்று குறிப்பிடடிருந்தார்.

மாநாட்டின் முடிவில் சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கூட்டாக விடுத்த அறிகையில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையைத் தாம் வன்மையாகக் கணடிப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். (து-2)

# சுனாமி பாதிப்பாளருக்கு தொடரும் உதவிகள்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு வெளிநாட்டு அரசாங்கங்களும் நிறுவனங்களும் தொடர்ந்தும் உதவிகளை வழங்கி வருகின்றன.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வீடமைப்பு வேலைத் திட்டங்களைத் துரிதப் படுத்தவென ரூ.35 கோடி பெறுமதியான வாகனங்களை பிரான்ஸ் நாட்டின் ரொனால்ட் நிறுவனம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

சுனாமி அனர்த்தம் காரணமாக மட்டக்களப்பு, அம்பாறை, கொழும்பு ஆகிய இடங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இராமகிருஷ்ண மிஷன் சமைத்த உணவு, மருந்து வகைகள், கூடாரங்கள், உடுப்புகள், உலர் உணவுப் பொருட்கள் முதலியவற்றை வழங்கியுள்ளது. (து-2)

# சார்க் கூட்டம் ஒத்திவைப்பு

இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மறைவையொட்டி இம்மாதம் 16ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை நடைபெறவிருந்த சார்க் நாடுகளின் நிலையியற் குழுவின் 31ஆவது கூட்டமும், நிகழ்ச்சிக குழுவின் 26ஆவது கூட்டமும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் நடைபெறவிருந்த இந்தக் கூட்டங்கள் ஒத்திவைக்கப்படுவதாகவும், அங்கத்துவ நாடுகளுடனும் சார்க் செயலகத்துடனும் பேச்சுவார்த்தைகள் நடததிய பின்னர் புதிய திகதி அறிவிக்கப்படும் எனவும் சார்க் நாடுகளுக்கு தலைமைதாங்கும் பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

சார்க் அமைப்பைப் பலப்படுத்த பெரும் பங்களிப்பைச் செய்தவரும், சார்க் அமைச்சர்கள் சபையின் உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமருக்கு மரியாதை செலுத்து முகமாகவே இந்தக் கூடடங்கள் ஒத்திவைக்கப்பட்டதாக பாகிஸ்தான வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் அரசாங்கம் இக்கொடிய பயங்கரவாத தாக்குதலை வன்மையாகக் கணடிக்கிறது. லக்ஷ்மன் கதிர்காமர் எப்போதும் பாகிஸ்தானின் நண்பராக நினைவில இருப்பாா என்று பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

தேசிய கலை, இலக்கியப் பேரவையினால் நடாத்தப்படும் புத்தகக் கண்காட்சியும் புத்தக விற்பனையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (து)

# கடவுச்சீட்டு மோசடி நபர்களை கைது செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி கடவுசசீட்டுப் பெறுவோரைக் கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இநநபர்களைக் கைது செய்வதற்காக பொலிஸ் மோசடிப் பிரிவு அதிகாரிகள் குழுவொன்று கடவுச்சீட்டு விநியோகிக்கும காரியாலயத்தில் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை போலி ஆவணங்களைப் பயன்படுத்தி கடவுச்சீட்டுப்பெற முயன்ற நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ற)

# கொழும்பு மத்திய பிரதேசத்தில் தீவிரமாகப் பரவும் டெங்கு

கொழும்பு மத்திய பிரதேசத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் அச்சம் நிலவுவதாக கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

வருடந்தோறும் பொதுவாக ஆகஸ்ட் மாதங்களில் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மாநகர சபையின் வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதியில் அசுத்தமான நிலைமை ஏற்பட்டுள்ளமையே இதற்கான காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகஸ்ட் மாதத்தில் இதுவரை 55 நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, கொழும்பு பிரதேசம் முழுவதும இவ்வருடத்தில் 505 நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாக அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளது. அதில 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, கடந்த வருடத்துடன் ஒப்பிடுமபோது இவ்வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 45 சதவீதத்தால் குறைநதுள்ளது.

மார்ச் மாதம் முதல் கொழும்பு மாநகர சபை அதிகார பிரதேசத்திற்குள் டெங்கு நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வைத்திய அதிகாரி மேலும குறிப்பிட்டுள்ளார். (ற-9)

# தரம் – 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

### வினாத்தாள் இல:19

**கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:**

| | |
|---|---|
| 01.அ.அனிஸ்ரன் | யா/சென்மேரிஸ் வித்தியாலயம். |
| 02.ப.ஸ்ரெபான் | யா/மத்திய கல்லூரி. |
| 03.ம.மரியதனுசன் | யா/சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயம். |
| 04.சி.காருண்ஜா | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |
| 05.றெ.அலெக்சன் | யா/மத்திய கல்லூரி. |
| 06.ஆ.ருவனஸ் | யா/சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயம். |
| 07.இ.கவிதினி | யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரி. |
| 08.அ.அருள்மேரி | யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம். |
| 09.சி.லதாயினி | யா/இராமநாதன் கல்லூரி. |
| 10.செ.துவாரகா | யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தி. |
| 11.செ.சுலக்சன | யா/விவேகானந்தா. |
| 12.கு.ஜெனோலின் | யா/மத்திய கல்லூரி. |
| 13.ப.மதூசன் | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |
| 14.க.கபிலன் | யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயம். |
| 15.செ.அனோஜன் | யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம். |
| 16.ஜெ.சுஜனிகா | யா/மானிப்பாய் நவோதயா கல்லூரி. |
| 17.தி.ஷரவணபவன் | யா/சுன்னாகம் இராமநாதன் கல்லூரி. |
| 18.தே.பவரூபன் | யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம். |
| 19.பு.சுரேன் | யா/மோலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம். |
| 20.செ.கஜநாராஜனி | யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை. |
| 21.ஸ்ரீ.சினேகா | யா/மானிப்பாய் றோ.க.த.க பாடசாலை. |
| 22.க.போல்ராஜ் | யா/இணுவில் மத்திய கல்லூரி. |
| 23.ப.நிரோஜா | யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம். |
| 24.வி.ஆராணி | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |
| 25.த.தர்சன் | யா/மத்திய கல்லூரி. |
| 26.ச.நிருசிகா | யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி. |
| 27.பு.ரிசாந்தினி | யா/வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி. |
| 28.கி.விதுசா | யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம். |
| 29.கு.சரண்யா | யா/ஞானாசாரியார் கல்லூரி. |
| 30.க.கீதா | யா/வல்வை மகளிர் மகாவித்தி. |
| 31.செ.மாதுர்யா | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தி. |
| 32.இ.துசிகரன் | யா/மத்திய கல்லூரி. |
| 33.க.றஜீவன் | யா/மத்திய கல்லூரி. |
| 34.சு.லகசனா | யா/இருபாலை சீ.சீ.த.க பாடசாலை. |
| 35.ச.கம்சலா | யா/இணுவில் மத்திய கல்லூரி. |
| 36.க.துசாரா | யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி. |
| 37.தி.சங்கீதா | யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். |

### வினாத்தாள் இல-19 இன் விடைகள்

01.5 →8 →13 →18 →24 →42 02.11 →13 →21 →28 →34 →42

03.B யும் Cயும் 04.3 05.(i)A (ii) D 06.(i)இரண்டு (ii)B,C

07.4 8.10 09.40 10.சதுரவடிவமானது 11.16cm 12.64cm

13.கமல் 14.சுனில் 15.சுனில், அனில், ரவி, கமல் 16.O 17.EG

18.MO 19.9 20.16 21.9810 22.7

23.அகலம் 5cm, நீளம் 10cm 24.ஒற்றை எண் 3, இரட்டை எண் 154

25.36 26.கப்பல் 27.கண்ணாடி 28.தொலைக்காட்சி

29.(2) 30.(3) 31.(2) 32.(3) 33.(4) 34.(2)

35.(1) 36.(1) 37.(3) 38.(2) 39.(3) 40.(3)

# இந்தியாவில் மீண்டும் ஆசிய விளையாட்டுப் போட்டி

## பிரதமர் மன்மோகன்சிங் தெரிவிப்பு



ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மீண்டும டெல்லியில் நடத்தப்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

டெல்லி செங்கோட்டையில் சுதந்திரதின விழாவில் கொடியேற்றி வைத்து பிரதமர் மன்மோகன்சிங் உரையாற்றுகையிலேயே இவவாறு தெரிவித்தார்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மீண்டும் டெல்லியில் நடைபெறும். இதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்தியா மேற்கொளளும். நமது நாட்டு இளைஞர்களும் விளையாட்டு வீரர்களும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புக் கிடைக்கப் போகிறது. ஆசிய போட்டிகள் டெல்லியில் நடைபெற அனைத்து முயற்சிகளும் விரைவில எடுக்கப்படும் என்று மன்மோகன் சிங் கூறினார்.

இந்தியாவில் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் கடந்த 1982ஆம் ஆண்டு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (து-19)

# ரபெல் நடால் சம்பியன்



கனடா நாட்டில் உள்ள மொன்றியல் நகரில நேற்றுமுன்தினம் நடைபெற்ற ரோஜர்ஸ கோப்பைக்கான ரெனிஸ் இறுதிப் போட்டியில் ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் அமெரிக்க வர்ர் அகாசியை தோற்கடித்து கோப்பையை வென்றுள்ளார்.

விறுவிறுப்பாக நடந்த இறுதிப்போடடியல் முதல் செற்றை நடால் கைப்பற்றினார். ஆனால் அடுத்த செற்றில் அகாசி போர்க் குணத்துடன் போராடி 2ஆவது செற்றைக் கைப்பற்றினார். மூன்றாவது செற் ஆட்டத்தில் நடால் ஆபாரமாக ஆடி அகாசியை திக்கு முக்காட வைத்து 3ஆவது செற்றைக் கைப்பற்றினார்.

இறுதியில் நடால் 6-3, 4-6, 6-2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனார். நடால் வெற்றி பெற்றதும மைதானத்தில் படுத்து உருண்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். (து-19)

# தரப்பட்டியலில் சரிந்தார் சானியா



உலக ரெனிஸ் வீராங்கனைகள் தரப்படடியலில் இந்தியாவின் ரெனிஸ் வீராங்கனை சானியா மிர்சா 50 ஆவது இடத்தில் உள்ளார்.

முன்னதாக 48 ஆவது இடத்தில் இருந்தார் சானியா. லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற ஓபன் ரெனிஸ் போட்டியில் முதல் சுற்றிலேயே வெளியேறியதை அடுத்து தரப்பட்டியலில் இருந்து 2 இடங்கள் பின்நோக்கிச் சென்றுவிட்டார். (து-19)

# ஆசிய - ஆபிரிக்க அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டித் தொடர்

## தென்னாபிரிக்காவில் இன்று ஆரம்பம்

(செஞ்சூரியன்)

ஆசிய-ஆபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்று ஒருநாள் போட்டித் தொடர் இன்று தென்னாபிரிக்காவில் உள்ள செஞ்சூரியன் நகரில் நடைபெறவுள்ளது.

ஆபிரிக்க அணியில் தென்னாபிரிக்கா, கென்யா, சிம்பாவே நாடுகளைச் சேர்ந்த வர்ர்கள் இடம்பெறவுள்ளனர். தென்னாபிரிக்க வீரர் சிமித் அணித் இந்த அணிக்குத் தலைவராக உள்ளார். நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் சிம்பாவே பஙகேற்றுள்ளதால் அந்த அணியில் உள்ள வீர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்கவில்லை. இதனால் தென்னாபிரிக்கா, கென்யா வீரர்கள் மட்டும் கலந்து கொள்கின்றனர்.

இன்சமாம் தலைமையிலான ஆசிய அணியில் இந்திய வீரர்களான சேவாக், கும்ளே, டிராவிட், பதான் ஆகிய நான்கு பேரும இடம்பெற்றிருந்த போதும் டிராவட் மற்றும் பதான் போட்டியிலிருந்து விலகினர். இதே போல் இலங்கை வீரர்கள் ஜெயசூர்யா, வாஸ் ஆகியோரும் பங்கேற்கவில்லை.

ஆசிய அணியில் இன்சமாம் (அணித் தலைவர்), சேவாக், அப்ரிட்டி, சங்ககார, யுகானா, முரளிதரன், ரசாக், கும்ளே, அக்தர், முகமது அசரடில், மோர்ட்சா ஆகிய வீரர்களும், ஆபிரிக்க அணியில் சிமித் (அணித் தலைவர்), ஸ்டிவ டிக்லோ, கலிஸ், டிபபன்னர், வில்லியம்ஸ், மார்கபவுச்சர், ரூடால்ர்போஜ், தோமஸ், ஓடோயோ, கலின்ஸ் ஓடியா, ஆன்டாங், சோன்டேக் ஆகிய வீரர்களும் இடம்பெற்றுள்ளனர். (து-19)

# உள்ளூர்ப் போட்டிகளிலும் புதிய கிரிக்கெட் விதிகள்

(புதுடெல்லி)

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) வகுத்துள்ள ஒருநாள் போட்டிக்கான புதய விதிகளை உள்ளூர் போட்டிகளிலும் அறிமுகம் செய்ய இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் முடிவு செய்துள்ளது.

டில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாரியத்தின் செயறகுழுக் கூடடத்தில் இம் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

கூட்டத்துக்குப் பறகு கிரிக்கெட் வாரியத்தின் தலைவர் ரண்பீர் சிங் மகேந்திரா செய்தியாளர்களிடம் பேசுகையில்,

ஒருநாள் போட்டிக்கான புதிய விதிகளை ஐ.சி.சி வகுததுள்ளது. இது குறித்து வாரியத்தின் தொழில்நுட்பச் சபை ஆராய்நதது. அது அளித்த பரிந்துரையின் பேரில் இவ்விதிமுறைகளை உள்ளூர் போட்டிகளிலும் அறிமுகம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது எனத தெரிவித்தார். (து-19)

## விளையாட்டு செய்திகள்

# ஈட்டி எறிதலில் சாதனை

ஈட்டி எறிதல் போட்டியில் கியூபா வீராங்கனை உலக சாதனை படைத்துள்ளார்.

பின்லாந்து நாட்டில் உள்ள ஹெல்சினகி நகரில் உலக தடகளப் போட்டிகள் நடந்து வருகின்றன. நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் கியூபா வீராங்கனை மெண்டெஸ் 71.70 மீற்றர் தூரம் எறிந்து புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

இதற்கு முன்பு 2001ஆம் ஆண்டு நடைபெற்ற உலக தடகளப் போட்டியில் இவர் 71.54 மீற்றர் தூரம் எறிந்து சாதனை படைத்திருந்தார்.

நேற்றுமுன்தினம் அந்த சாதனையை அவரே முறியடித்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (து-19)

# 12 நிமிடங்களில் 100 பணிஸ் சாப்பிட்டுச் சாதனை

(கொங்கொங்)

கொங்கொங் நகரில் நடைபெற்ற பணிஸ் உண்ணும் போட்டியில் உலகச் சம்பியன் பட்டத்தை ஜப்பான் நாட்டைச் சோந்த கொபே சிட்டகாரோ பெற்றுள்ளாா.

இவர் 12 நிமிடங்களுக்குள் நூறு பணிஸ்களை உட்கொண்டு இந்த வெற்றியை சுவீகரித்துள்ளார். இரண்டாவது இடத்தைப் பெற்றவர் அதே கால எல்லைக்குள் 47 பணிஸகளை உட்கொண்டுள்ளார். இப்போட்டியல் வெற்றிபெற்றவருக்கு 2564 டொலர்கள் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியின் அரையிறுதிப் போட்டியில் கொபே சிட்டகாரோ 83 பணிஸ்களை சாப்பிட்டுள்ளார். வெற்றி பெற்ற இவர் விரைவில் கின்னஸ் சாதனை ஒன்றை நிலைநாட்டுவார் என்றுபோட்டி ஏற்பாட்டாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளார்கள். (து-19)

# வடக்கு கிழக்கு மாகாண மட்ட தடகள போட்டி முடிவுகள் - 2005

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு மாகாண விளையாட்டுத திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாவட்டங்களுக்கிடையிலான மாகாண மட்ட தடகளப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களது விபரம் வருமாறு:

**ஆண்கள் பிரிவில்**

**நளம் பாய்தல்**
1. ஆர். ரதீசன் - திருகோணமலை
2. பி.யூலியற் கிலிறஸ் - மன்னார்
3. எம்.எ.சி.யஸீர் - அம்பாறை

**குண்டு எறிதல்**
1. எம்.பிரதீப்குமார் -யாழ்ப்பாணம்
2. கே.சிவகுமார்- கிளிநொச்சி
3. இ.உதயகுமார் - யாழ்ப்பாணம்

**110 மற்றர் தடைதாண்டல்**
1. எம்.சஞ்சீவ்- யாழ்ப்பாணம்
2. எஸ்.ரஞ்சித்குமார்- யாழ்ப்பாணம்
3. கே.சியந்தன் - மன்னார்

**200 மற்றர் ஓட்டம்**
1. எஸ்.பிரசன்னா - திருகோணமலை
2. எம்.ஐ.எம்.நசீன் - மட்டக்களப்பு
3. எம்.ஏச்.எம்.அஸ்வத் - அம்பாறை

**தட்டு எறிதல்**
1. இ.உதயகுமார்- யாழ்ப்பாணம்
2. ஜே.அன்பனாளன்- யாழ்ப்பாணம்
3. பி.ஆரோக்கியராஜா- மன்னார்

**உயரம் பாய்தல்**
1. எஸ். கமலமோகன்- யாழ்ப்பாணம்
2. ரி.கிரிதரன்- மட்டக்களப்பு
3. எஸ்.ரஜீபன்- யாழ்ப்பாணம்

**10,000 மற்றர் ஓட்டம்**
1. டபிள்யூ.குணரட்ன- திருகோணமலை
2. ஆர்.லோகராதன் - கிளிநொச்சி
3. எஸ். ஜிரோன்- மன்னார்

**5000 மற்றர் ஓட்டம்**
1. வி.யோகேஸ்வரன்- மன்னார்
2. டபிள்யூ.குணரட்ன- திருகோணமலை
3. கே.குமரன்- மன்னார்

**400 மற்றர் ஓட்டம்**
1. எஸ்.பிரசன்னா- திருகோணமலை
2. எஸ். நிரஞ்சன்- முல்லைத்தீவு
3. எம்.ஐ.எம்.நசீர் - மட்டக்களப்பு

**800 மற்றர் ஓட்டம்**
1. எஸ்.அந்தோனி - மன்னார்
2. ஆர்.நீஜிஸ் - மன்னார்
3. எ.முகுந்தன் - யாழ்ப்பாணம்

**ஈட்டி எறிதல்**
1. எஸ். சிறீகரன் - வவுனியா
2. பி.ஆரோக்கியராஜா - மன்னார்
3. ரி.பிரசாந்த் - மட்டக்களப்பு

**400 மற்றர் தடைதாண்டல்**
1. எஸ்.நிக்கொலஸ் மியாஸ் - மன்னார்
2. ஆர்.நிரோசன் - வவுனியா
3. கே.அகிலகிரி - முல்லைத்தீவு

**முற்பாய்ச்சல்**
1. பி.யூலியற் கிளிறஸ் - மன்னார்
2. எஸ்.சஞ்சித் - யாழ்ப்பாணம்
3. கே.சியந்தன் - மன்னார்

**100 மற்றர் ஓட்டம்**
1. ஆர்.ரதீசன் - திருகோணமலை
2. எ.ஜி.ரிச்வான் - அம்பாறை
3. ஆர்.கரோன் - அம்பாறை

**1500 மற்றர் ஓட்டம்**
1. ஜி.செந்தூரன்- வவுனியா
2. வி.யோகேஸ்வரன்- மன்னார்
3. எம்.மயூரன்- முல்லைத்தீவு

**தடி ஊன்றிப் பாய்தல்**
1. ஆர்.ரதீசன்- திருகோணமலை
2. எஸ்.சிறீசுபாஸ்கரன்- மன்னார்
   கே.ரமணகுமார்- மன்னார்
3. எஸ்.நவநீதன்- யாழ்ப்பாணம்

**4x400மற்றர் அஞ்சல் ஓட்டம்**
1. திருகோணமலை 2. மன்னார்
3. முல்லைத்தீவு

**4x 100 மற்றர் அஞ்சல் ஓட்டம**
1. அம்பாறை 2. திருகோணமலை
3. மட்டக்களப்பு

(து-19,68)

(தொடரும்...)

# 2 டெஸ்ட் போட்டி சுற்றுத் தொடருக்கு முரளிதரன், குமார் சங்ககார எதிர்ப்பு





இரண்டு டெஸ்ட் போட்டிகள் அடங்கிய சுற்றுத் தொடர்களுக்கு முற்றுப் புள்ளி வைக்குமாறு இலஙகை கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர்களான முத்தையா முரளிதரன், குமார் சங்ககார ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

ஒரு சுற்றுத் தொடர் குறைந்தபட்சம் மூன்று போட்டி களையாவது கொண்டிருக்க வேண்டும் என்பதே இவர்களது கருத்தாகும். முரளிதரனும், சங்ககாரவும் தென்னாபிரிக்கா செஞ்சூரிய மைதானத்தில் ஆசிய அணியுடனான முதல் பயிற்சியை முடித்துக் கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் இக் கருத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

ஆசிய அணிக்கும், ஆபிரிக்க அணிகளுக்கும் இடையிலான அப்ரோ ஆசியா வெற்றிக் கிண்ணத்திற்கான முன்று ஒருநாள் போட்டி இன்று ஆரம்பமாகின்றது. (து-19)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை புகையிரத திணைக்களத்தின் உத்வி பிரதேச போக்குவரத்து அதிகாரி (இயந்திரமற்ற) பதவிகளை நிரப்புவதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி 18வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். இதேவேளை, தற்போது அரச மறறும் மாகாண அரச சேவையில் உளளவர்களுக்கு கூடிய வயதெல்லை ஏற்புடையதன்று.

விண்ணப்பங்கள் யாவும் 05.09.2005ற்கு முன்னர் கொழும்பு-10, புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம், புகையிரத முகாமையாளர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலதிக தகவல்களை 2005.08.12 அன்று வெளியான வர்த்தமானியில பார்வையிடலாம். (ற-19)

# சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

துணைவி சிவனின் கூடல் ஞானவைரவ சுவாமி ஆலயத்தின் சங்காபிஷேகம் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

காலை 9.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி பகல 11.00 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து மாலை 6.00 மணிக்கு மூலவர் பூசையுடன் வசந்த மண்டபப் பூசை நடைபெற்று சுவாமி வீதிவலம் வரவுள்ளது.

இச் சங்காபிஷேக பிரதம குருவாக சிவஸ்ரீ சி.பாலசண்முகக் குருக்கள் கடமையாற்றவுள்ளார். (ற-19,49)

# விண்வெளியில் சாதிக்கவே பிறந்தாயோ பெண்ணே?

அமெரிக்காவின் நியூயோர்க் நகரம் கடந்த 9ஆம் திகதி குதூகலித்து மகிழ்ந்தது. உலக சாதனை படைத்த ஒருவரின் பிறப்பிடமாக விளங்குவதை நினைத்து பெருமை கொண்டது.

நியூயோாக்கைவிட அதில் உள்ள எல்மிராபகுதி மேலும் அகமகிழ்ந்தது. சாதனையாளரை உலகுக்குக் கொடுத்த மண் என்ற மகிழ்ச்சி யார் இந்த சாதனையாளர், என்ன சாதனை செய்தார்? விண்வெளிக்குச் சென்றுத் திரும்பிய சாதனை! நிறைய பேர்தான் விண்வெளிக்குப் போகிறார்களே? நாம் தினம் தினம் வாழ்க்கையையே போராடிப் போராடி சாதனை படைக்கின்றோம். அதைவிட இது பெரிய சாதனையா என்று யோசிப்பவர்களும் உண்டு. ஆனால் இந்தச் சாதனையாளர் நிகழ்த்தியுள்ள சாதனை அசாதாரணமானது. அனைவரும் மூக்கில் விரல் வைக்கும் துணிச்சல் கொண்டது.

கடந்த 9ஆம் திகதி, அமெரிக்கா மட்டு


டிஸ்கவரியை இயக்கியபடி....

மல்ல-உலகே பரபரப்பாக ஒரு "திரில்லை எதிர்பார்த்துக் காத்திருந்தது. அது அமெரிக்காவின் 'டிஸ்கவரி விண்கலம் பத்திரமாகத் தரையிறங்குமா என்பதுதான். விண்கலத்தை பத்திரமாகத் தரையிறக்கி உலக மக்களிடையே பெரும் பாராட்டைப்பெறறவர், விண்கலத்தை இயக்கிய பெண் கமாண்டர் இலீன் காலின்ஸ்.

கடந்த 2003ஆம் ஆண்டு விண்ணில் ஏவப்பட்ட கொலம்பியா விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்திற்குச்சென்று மீண்டும் பூமிக்குத் திரும்பும் வேளையில் வெடித்துச் சிதறிய காட்சியை இன்னும் நம் கண்கள் மறக்கவில்லை. அதில் பயணம் மேற்கொண்ட இந்திய வீராங்கனை கல்பனா சாவ்லாவையும் யாரும் மறக்க முடியாது. விண்கலம் வெடித்துச் சிதறக் காரணம் என்ன மீண்டும் விண்கலத்தை ஏவ முடியுமா? ஏவினாலும், பத்திரமாகக் தரையிறங்க முடியுமா? இத்தனை கேள்விகளுக்கும் விடையளிப்பது போல் அனைவரின் பயத்தையும் உடைத்தெறிந்து சாதனை படைத்தவர் தான் இப்பெண்.

கொலம்பியா வெடித்துச் சிதறுவதற்கு முன், மேற்கொண்ட முதல் பயணத்தில் 1999ஆம் ஆண்டில் பயணம் செய்தவர் இலீன் காலின்ஸ் அது வெடித்துச் சிதறிய செய்தி கேட்டு அரண்டுபோனாலும் உடனே சுதாகரித்து அடுத்த விண்கலத்தையும் ஏவும் பணியில் மனமுவந்து ஈடுபட்டார். கொலம்பியா பூமியில் இருந்து கிளம்பிய போது அதன் வெளிப்புறத்தில் இருந்து ஒரு தகடு கீழே விழுந்தது. அப்போது அதை யாரும் பிரச்சினையாகக் கருதவில்லை.

"டிஸ்கவரி" விண்கலம் யூலை 26ஆம் திகதி விண்ணிற்குச் செல்ல கிளம்பிய



'பைலட்' டாக...

போதும் கலத்தின் வெளிப்புறத்தில் இருந்து தகடு ஒன்று கழன்று விழுந்தது. ஆனால் இந்தமுறை விஞ்ஞானிகள் உஷாராகி விட்டனர். விண்கலத்தை வெப்பத்திலிருந்து பாதுகாப்பதற்காகப் பொருத்தப்பட்டுள்ள ஓடு விழுந்ததை சாதாரணமாக எடுத்துக் கொள்


டிஸ்கவரி குழுவில் காலின்ஸ்.

ளாமல், சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு விண்கலம் சென்றதுமே அதைச் சரிசெய்ய முடிவு செய்தனர். விண்கலத்தில் சென்று பிரச்சினைகளைச் சரிசெய்து சரியான வானிலை இலலாத சூழ்நிலையில் தரையிறங்கும் சிக்கலை கவனமாகக் கையாண்டு வெற்றிகரமாக பயணத்தை முடித்தபெருமையில் முக்கியத்துவம் பெரும்பங்கை ஆற்றியவர் இலீன் காலின்ஸ் இவையெல்லாம் எப்படி சாத்திய மாயிற்று யார் இவர் என்று யோசிக்கத் தோன்று கின்றதல்லவா? இனி காலின்ஸ்சைப் பற்றிய விபரங்களைப் படியுங்கள்.

கடந்த 1956ஆம் ஆண்டு நியூயோர்க் நகரில் எல்மிரா என்ற பகுதியில் நவம்பர் 19ஆம் திகதி பிறந்தார். இலீன் காலின்ஸ் விமானங்கள் கட்டுமானம் பராமரிப்பு என்று எப்போதும் சுறு சுறுப்பாய் இயங்கிவரும் பகுதி எல்மிரா 1890 ஆம் ஆண்டிலிருந்தே இதே தொழிலில் இப்பகுதி ஈடுபட்டுவந்துள்ளதால் காலின்ஸுக்கு சிறு வயது முதலே விமானத்தில் பறக்க ஆசை பிறந்தது.

இவருக்கு 9 வயதான போது இவரது பெற்றோர் விவாகரத்தில் பிரிந்துவிட்டனர். மனம் ஒடிந்தார் காலின்ஸ் போராடி வெற்றி காண்பதில் சிறுவயது முதலே பயிற்சி மேற்கொண்டரர். பள்ளிப் படிப்பு முடிந்ததும் மேல் படிப்புப் படிக்க பணம் இல்லை. 16 வயதில் வேலைக்குச் சேர்ந்தார். ஆயிரம் டொலர் சேர்த்தார். 1974ஆம் ஆண்டு நியூயோர்க்கில் எல்மிரா அக்கடமியில் சேர்ந்து கணித பாடத்தில் பட்டம் பெற்றார்.

கார்னிங் கம்யூனிட்டி-காலேஜில் அறிவியல் கற்றுத் தேர்ந்தார். 1978ஆம் ஆண்டு சிராகுஸ் பல்கலையில் சேர்ந்து கணிதம் மற்றும் பொருளாதாரத்தில் பட்டம் பெற்றார். இஸ்டார்போர்டு பல்கலையில் 1986ஆம் ஆண்டு அறிவியல் ஆராய்ச்சியல் முதுகலைப்பட்டம் பெற்றார். விண்வெளி இயக்கம் மற்றும் நிர்வாகம் குறித்து வெப்ஸ்ரர் பலக


பயிற்சியாளராக...

லையில் 1989ஆம் ஆண்டு முதுகலைப் பட்டம் பெற்றார். இப்படி படிப்படியாக உயர்ந்தபடியே பைலட் பயிற்சியும் மேற்கொண்டார் அதில் தான் இவர் வித்தியாசம் தனித்துவமாக மாறியது.

**படிப்பு:** கடந்த 1979ஆம் ஆண்டு ஒக்லஹாமாவில் பைலட்டுக்கான பயிற்சி மையத்தில் சேர்ந்து விமானப்படை இள நிலைப் பைலட்டாக தேர்ச்சிபெற்றார். 1982ஆம் ஆண்டு வரை அதே பயிற்சி மையத்தில் சிறு ரக விமானத்தின் பயிற்சியாளராகப் பணியாற்றினார். 1983முதல் 1985வரை கலிபோர்னியாவில் உள்ள டிராவிஸ் நிறுவனத்தில் அதிக இருக்கைகள் கொண்ட விமானத்திற்கான கமான்டராகவும் விமான ஓட்டுநர் பயிற்சியாளராகவும் பணியாற்றினார். 1986ஆம் ஆண்டுவரை ஏர்போர்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜில் பயிற்சி மேற்கொண்டார். 86 முதல் 89ரை கொலராடோவில் உள்ள அமெரிக்க விமானப்படை அக்கடமியில் சேர்ந்து பணியாற்றினார். அங்கு கணக்குப் பாடத் திற்கான துணை விரிவுரையாளராகவும் டி-41விமானத்திற்கான விமான ஓட்டுநர் பயிற்சியாளராகவும் பணியாற்றினார். கலிபோானியாவில் விமானப்படை ஓட்டுநர் பள்ளியில விண்வெளி வீரர் பயிற்சி மேற்கொண்டார்.

1990ஆம் ஆண்டுவரை இங்கு பயிற்சி மேற்கொண்டிருந்த போது அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி மையமான 'நாசா' விற்கான விண்வெளி வீரர் பயிற்சிக்குத் தேர்வுசெய்யப்பட்டார்.

அதற்குக் காரணம் மொத்தம் 5000 மணி அதுவும் 30 ரக விமானங்களில் பறந்த அனுபவம் உண்டு அத்துடன் 419 மணிநேரம் விண்வெளி ஓடத்தில் தங்கிப்பறக்கும் முன் பயிற்சி பெற்றவர்.

இவர் கணவர் வர்த்தக பைலட்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**பயிற்சியும் சாதனைகளும்:** கடந்த 1991 ஆம் ஆண்டு விண்வெளி வீரர் குழுவில் ஒருவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது அபார திறனால் மிக வேகமாக வளர்ந்தார். பூமியைச் சுற்றிவரும் விண்கலத்தை வடிவமைப்பதில் பயிற்சி பெற்றார். விண்வெளி வீரர்களைத் தயார் செயயும் பணியில் ஈடுபட்டார். விண்கலத்தை இயக்கும் வல்லுநரானாா விண்வெளியை பூமியில் இருந்து கிளப்புவது முதல் பிரச்சினைகள் ஏற்பட்டால் திறம்படச் சமாளிப் பதுவரை அனைத்தையும் கையாண்டார். ஸ்பேஸ் கிராப்ட் கம்யூனி கேட்டராகவும் பணியாற்றினார். நாசாவில் வேகமாக வளர்ந்து விண்வெளி செல்லவும் தயாரானார். 1995 ஆம் ஆண்டு பெப்ரவரி 3ஆம் திகதி ஏவப்பட்ட விண்கலததில் பைலட்டாக பயணித்தார். விண்வெளியில் ஆராய்ச்சி மேற்கொள்ளும் ரஷ்சியாவின் "மிர்" நிலையத்திற்குச் சென்று வந்தார். விண்வெளிக்குப்பறந்த முதல் பெண் பைலட் இவர் என்ற பெருமை பெற்றார். அதனை அடுத்து 1997 ஆம் ஆண்டு மே 15ஆம் திகதி விண்ணுக்குச்சென்ற விண்கலத்திலும் பயணித்தார். அதன் பிறகு 1999ஆம் ஆண்டு கொலம்பியா விண்ணுக்குச் சென்றது. அதில் விண்கலம் மற்றும் அதில் பயணிக்கும் குழுவின் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டை

இலீன் காலின்ஸ் வாங்கிய சில விருதுகள்


விமானப்படையில் ஆயுதப்படையில் பிளையிங் கிராஸ் மெரிடோரியல்

யும் கையில் ஏந்திச்சென்று வெற்றிகரமாக கொலம்பியாவை கீழ் இறக்கினார் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டை ஏற்ற முதல் பெண் விண்வெளி வீரர் என்ற சாதனையை இம்முறை நிகழ்த்தினார். இப்போது 7 விண்வெளி வீரர்களை ஏந்திச்சென்ற டிஸ்கவரியையும் இயக்கி குழுவிற்கும் தலைமை ஏற்று சாதனையைத் தொடர்கிறார்.

**சொந்த வாழ்க்கை:** இவ்வளவு உயரே பறக்கும் இவர் படிப்பு முழுதும் இஸ் காலாஷிப்பில் தான் நடந்தது. இவரது வாழ்க்கை குறிதது இவரே சொல்கிறார். "சிறுவயதிலேயே விண்வெளி வீரர்களை பார்த்து ஆச்சரியப் பட்டிருக்கிறேன். எல்லோருமே ஆண்களாக வேதான உள்ளனர். ஏன் பெண்களே இல்லை என்று யோசிப்பேன் ஆனால் அதற்காக மனசெல்லாம் வருந்தியதில்லை. "என் அம்மா எங்களை விட்டுப்பிரிந்தது எனக்குப் பேரிடியாக விழுந்தது என் தந்தையும் வேலையை இழந்ததால் சாப்பாட்டுக்குச் சிரமப்பட்டோம். திக்குத்திணறி பள்ளிப் படிப்பை முடித்தேன். ஆசிரியர் பயிற்சி மேற்கொள்ள முயன்றேன். ஆனால் அங்கே ஏகப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சிக்காக காத்திருந்தனர் மனம் மாறி பைலட்டாகப் பயற்சி மேற்கொண்டேன். 19வயதுதான் எனக்குத் திருப்புமுனை. அதன் பிறகு அனைத்துமே தட்ட மிட்டபடி நடந்தன. 1974ஆம் ஆண்டு பெண இராணுவப் பைலட்டுகள் தேவை என்ற விளம்பரத்தை பேப்பரில் படித்தேன். சரியான நேரத்தில் சரியான சந்தர்ப்பம் அமைந்தது.

ஆனால் என் சகபைலட்டுகளில் மனைவிகள் என்னிடம் தகராறு செய்தனர் பைலட உடையில் நான் அவர்களுடன் வேலை செய்வதை அவர்களுடைய மனைவியர் விரும்பாமல் என்னை இராணுவத்திலிருந்து வெயியேற்றத் துடித்தனர். இதனால் எனக்கு நண்பர்கள் இழப்பு ஏற்பட்டது. ஆனால் அதற்கெல்லாம் வருத்தப்படவில்லை. என்னுடன் உண்மையாகப் பழகியவர்கள் மட்டும் இன்னும் நண்பர்களாகவே பழகிய போது மனதில் உறுதி பிறந்தது. மிக நேர்மையாக வெளிப்படையாக இருக்க முடிவுசெய்தேன். யாருடனும் அனாவசியமாக ஊர்சுற்றுவதில்லை என்பதை மிக நேர்மையாகத் தெளிவுபடுத்தினேன் இறுதியில் என்னைச் சந்தேகித்தவர்களே என்னுடன் நண்பிகளாகப் பழகத் தொடங்கினர்.

கலிபோர்னியாவில் சரக்கு விமான ஓட்டுநராக இருந்தபோது 1983ஆம் ஆண்டு ஆண்ட் பேர்ஜங் என்ற பைலட்டைச் சந்தித்தேன் இருவரும் திருமணம் செய்துகொண்டோம். இப்போது எனக்கு இரண்டு குழந்தைகள்.

முதன் முதலில் விண்ணுக்குப் பறந்த போது என் முதல் குழந்தை நான் நிலவுக்குச் செல்கிறேன் என்று நினைத்தாள் அவன் வளர வளர அவர்களுக்கு எல்லா வற்றையும்


விண்வெளி வீரராக அறிமுகம்

புரியவைத்தேன். இன்னும் கூட சில குழந்தைகள் விண்வெளியில் கடவுளைப் பார்க்கீறீர்களா என்று கேட்கின்றனர். அவர்களுக்கும் எழுமையான முறையில் விபரங்களை எடுத்துச் சொல்கிறேன்.

எப்படி இந்த அசாத்தியத்திறமை சாத்தியமானது? பயிற்சி-பயிற்சி...பயிற்சிதான்! நாம் செய்யும் வேலைகுறித்து நூறு சதவீதம் அறிந்துவைத்திருக்க வேண்டியது அவசியம். நம்பிக்கையுடன் வேலை செய்ய இது மிக மிக அவசியம் விண்வெளி ஆராய்ச்சி விண்கலத்தில் பயணிப்பது போன்ற வேலைகளில் ஒரே ஒரு துளிசந்தேகம் இருந்தால்கூட நாம் அந்தப் பணியை தொடக்கூடாது மீறித் தொட்டு விட்டால் அடுத்த நொடி மரணத்தைத் தழுவ வேண்டியதுதான். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது முற்றிலுமாக உணர்ந்தவராக இருப்பதுதான் என் வேலைக்கான சவால். இதற்கு கடுமையான பயிற்சி முக்கியம் சிறுவயது முதலே போராட்டத்தை வெற்றிகொள்ளும் மனப் பக்குவத்தை வளர்த்துக் கொண்டேன். விண்வெளி பயணத்தில் வீரர்கள் அணியும் உடையே கவசம் போன்றது அதில்தான் நாங்கள் இயக்கும் கருவிகளும் அதற்கான உபகரங்களும் இருக்கும். விணவெளி ஓடம் புறப்படும்போது ஏற்படும் சத்தம் மற்றும் ஒளி, அதற்குப்பின் புவியீர்ப்பை விட்டு முற்றிலும் புதிதாக நாங்கள் ஆற்றும் பணிகள் ஆகியவை எல்லாமே சவால் நிறைந்தவை இப்படி விபரிக்கும் காலிங்சின் வாங்கிய பரிசில்களும் சான்றிதழ்களும் ஏராளம்.

**விருதுகள்:** டிபன்ஸ் சுப்பிரியர் சர்வீஷ் மெடல்" அமெரிக்கப் பாதுகாப்புத்துறையில் இராணுவத்தில் முக்கிய பொறுப்பில் திறம்பட செயலாற்றுவோருக்கான விருது மூத்த அதிகாரிகளுக்கும் மேலாதிகாரிகளுக்கும் வழங்கப்படும் விருது இது.

**டிஸ்டிங்விஷ்டு பிளையிங் கிராஸ்:** அமெரிக்கா ஆயுதப்படைக்கு உதவியாக விமானத்திலிருநது தாக்குதல் நடத்துவோருக்கு வழங்கப்படும் விருது. கிரோபோன்று அசாதாரண முறையில் சிறப்பாகச் செயலாற்றிய வகையில்


விண்கலத்தின் கட்டுமானம் குறித்து சக வீரர்களுடன் விவாதம்...

காலிங்ஸுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

**டிபென்ஸ்மெரிரோரியல் சர்வீஸ் மெடல** அமெரிக்க இராணுவத்தில் மிக உயரிய விருதுகளில் மூன்றாவதாக வழங்கப்படும் விருது இது.

**கமாண்டேசன் மெடல்:** இராணுவப்பணியில் ஈடுபடும்போது எதிரிகளை நேரடியாகத்தாக்கி வெற்றிகொள்வோருக்காக வழங்கப்படும் இடைநிலை விருது இது.


**ஆர்ம்டு போர்ஸஸ் எக்ஷ்பெடிஷனரி:** அமெரிகக முன்னால் அதிபர் ஜான் கென்னடியால் தோற்றுவிக்கப்பட்ட விருது இது இராணுவத்தில் மிகச் சிறப்பாக பணியாற்றும் சிலருக்கென ஒதுக்கப்படும் விசேட பணியிலும சிறப்பாகப் பணியாற்றியதற்காக வழங்கப பட்ட விருது லெஜன் ஆப் ஆனர், வீர தீர செயலுக்காக பிரான்ஸ் நாடு வழங்கிய விருது.

காலிங்ஸ் பெயரில் சர்வதேச விமான நிலைய நுழைவாயில் இத்தனை விருதுகள் வாங்கியவரின் பெயரில் இப்போது ஒரு விமான தளமும் இயங்குகிறது. சிராகுஸ் ஹாண்கான் சர்வதேச விமான நிலையத்தின பிரதான நுழைவாயில் காலிங்ஸ் பேரில் நிறுவப்பட்டுள்ளது. இத்தகைய பெருமைகளைப பெற்ற காலிங்ஸின் சாகசத்தை விண்வெளி ஆராய்சசி வல்லுநர்களே வாய் ஓயாமல் பாராட்டுகின்றனர். நாமும் சேர்ந்து பாராட்டுவோம். □

**நன்றி இணையத்தளம்**

## தலைமை விமானியின் திடீர் மயக்கம்

# சைப்பிரஸ் விமானம் விழுந்து நொறுங்கியதில் 121 பேர் பலி



சைப்பிரஸ நாட்டு விமானம் ஒன்று கிரேக்க தலைநகர் ஏதென்ஸ் அருகே விழுந்து நொறுங் கி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 121 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

சைப்பிரஸில் உள்ள லர்னாகா நகரில் இருந்து கிரேக்கத்திற்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை சென்று கொண்டிருந்த இவ்விமானம் ஏதென்ஸை நெருங்கிக் கொண்டிருந்த போது கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது.

ஆபத்தில் சிக்கிய அந்த விமானத்தைக் காப்பாற்ற கிரேக்க நாட்டின் 2 போர் விமானங்கள் மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்படடன.

எனினும், கலாமு என்ற இடத்தின வடபகுதியில் பயணிகள் விமானம் விழுந்து நொறுங்கி தீப்பிடித்து எரிந்தது. விமானத்தில இருந்த 6 ஊழியர்கள் உட்பட 121 பேரும் உயிரிழந்தார்கள்.

விமானத்தின் தலைமைப் பைலட் திடீரென்று மயங்கி விழுந்ததால் விமானம் விபதுக்குள்ளாகி இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இதுகுறித்து உயர்மட்ட விசாரணைக்கு சைப்பிரஸ் நாட்டு அரசு உத்தரவிட்டிருக்கிறது. (து-2)

# கடத்தப்படும் விமானங்களைச் சுட்டு வீழ்த்தத் தீர்மானம்

## இந்திய அரசாங்கம் முடிவு

(சென்னை)

இந்திய விமானங்கள் கடத்திச் செல்லப்பட்டால் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் அவற்றைச் சுட்டு வீழ்த்துவது என மத்திய அரசு முடிவெடுத்துள்ளது.

புதுடெல்லியில் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நடைபெற்ற பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவைக் குழுக்கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

அமெரிக்காவில் 2 ஆண்டுகளுக்கு முன விமானங்களைக் கடத்திச் சென்று உலக வர்த்தக மையக் கட்டடங்களை தீவிரவாதிகள் தாக்கி அழித்தனர்.

அதுபோன்ற சம்பவங்கள் இந்தியாவில் நிகழாமல் தடுக்க விமானக் கடத்தல் தடுப்புக் குழுவினர் கடும் பாதுகாப்பு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்பு அமைசசர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

புதிய கொள்கைகளின்படி கடத்தப்பட்ட விமானங்கள் மூலம் தீவிரவாதிகள் தாக்குதல் நடததுவார்கள் என்பது உறுதிசெய்யப்பட்டால் அந்த விமானததைச் சுட்டு வீழத்துவது என்றும், பயணிகளை விடுவிக்க கடத்தல் காரர்களின் நிபந்தனைகளை ஏற்பது இல்லை என்றும் உயிரிழப்பைத் தடுக்கும் நோக்கில் மட்டுமே அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்றும் அமைச்சரவைக் குழு முடிவு செய்துள்ளது.

விமானக் கடத்தல்காரர்களுக்கு மரண தண்டனை விதிக்கவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

விமானக் கடத்தல் தொடர்பாக மத்திய அரசு மேற்கொண்டிருக்கும் புதிய கொள்கையை காங்கிரஸ், பாரதீய ஜனதா, மார்ஸிஸ் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட கட்சிகள் வரவேற்றுள்ளன.

மத்திய அரசின் இப்புதிய கொள்கையை வரவேற்றிருக்கும் பாரதீய ஜனதாக் கட்சி விமானத்தில் பயணம் செய்பவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு விமானங்களைச் சுட்டு வீழத்துவது பற்றி கடைசி நேரத்தில்தான் முடிவு செய்ய வேண்டும் என்று கூறியுள்ளது.

மார்ஸிஸ் கம்யூனிஸ்ட் கட்சி விமானக் கடத்தல் சம்பந்தமான புதிய கொள்கை உள்நாட்டுப் பாதுகாப்பை வலுப்படுத்தும் என்றும் இதுபோன்ற கடும் நடவடிக்கைகள் விமானக் கடத்தல் சம்பவங்களைத் தடுக்க உதவும் என்றும் கூறியுள்ளார். (து-2)

# அணுசக்தி ஏவுகணைத் திறனை அதிகரிக்க பாக். சூளுரை

(இஸ்லாமாபாத்)

அணுசக்தி மற்றும் ஏவுகணைத் திறன்களை அபிவிருத்தி செய்வதென்று பாகிஸ்தான் சூளுரைத்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பாகிஸ்தானின் 59 ஆவது சுதந்திர விழாவின் போது அந்நாடடின் பிரதமர் சவுகத் அஜ்ஸ் இஸ்லாமாபாததில் உள்ள கலையரங்கத்தில் நாட்டின் தேசியக் கொடியை ஏற்றி வைத்துப் பேசுகையில்,

அண்டை நாடுகளில் மாறிவரும் சூழலுக்கு ஏற்பத் தன நாட்டின் அணு மற்றும் ஏவுகணை திறன்களை பாகிஸ்தான் அதிகரிக்கும; அதறகான முயற்சி தொடரும் எனறு தெரிவித்தார்.

பாகிஸ்தான் சமீபத்தில் பாபர் ஏவுகணை என்ற ஏவுகணையை வெற்றிகரமான முறையில் சோதித்துப் பார்த்தது.

இந்நிலையில் ஆயிரம் கிலோமீற்றர் தூரம் சென்று தாக்கக்கூடிய அதி நவீன ஏவுகணையை பாகிஸதான் தயாரித்து வருவதாக அந்நாட்டின் தகவல் துறை அமைச்சர் ஷேக் ரஷீத் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூறியிருந்தார்.

இப்போது அந்நாட்டின் பிரதமர் சவுகத் அஜீஸ் அணுசக்தி திறனை அதிகரிப்போம் என்று கூறுகிறார்.

பாக்.பிரதமர் தொடர்ந்து பேசுகையில், 'பாபர் ஏவுகணையை வெற்றிகரமாகச் சோதித்துப் பார்த்திருக்கிறோம். நமது நாட்டின் சுதந்திரத்தை தற்காத்துக்கொள்ள வேண்டியது நமது பெரும் பொறுப்பாகும. பாகிஸ்தான் இன்றைக்கு ஒரு அணுசக்தி நாடாக திகழ்கிறது. காஷ்மீர் பிரச்சினை பற்றி எரியும் ஒரு பிரச்சினையாகும். இதற்குத் தீர்வுகாண வேண்டுமென்றால் தெற்காசியாவில நீடித்து நிற்கக்கூடிய அமைதி ஏற்படவேண்டும. காஷமீரத்து மக்களின் அபிலாஷைகளை அந்த தீர்வு எதிரொலிக்க வேணடும் என்று குறிபபிட்டார். (து)

## உலக தரிசனம்

# 978 மீ. சிகரத்தை எட்டியது 2 வயது சிறுசு

(இலண்டன்)

இங்கிலாந்தில் 978 மீற்றர் உயரம் கொண்ட ஸ்கே.:.பெல் பைக் மலையின் உச்சியை எட்டி சாதனைபுரிந்தது 2 வயது பெண குழந்தை எலிஷா ஸ்மித்.

இவ்வளவு சிறு வயதில் யாரும் இத்தகைய சாதனையைச் செய்திருக்க முடியாது என்று இலண்டனில் இருந்து வெளியாகும டெய்லி மெயில் பத்திரிகை கடந்த சனிக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

எலிஷா தனது பெற்றோரின் உதவியுடன் தான் மலையுச்சிக்குச் சென்றாள். பாதி வழியில் நடக்கமுடியாமல் அவளைத் தூக்கிச் செல்ல வேண்டியதாக இருக்கும் என்று தான் நினைத்தோம். ஆனால் சிகரத்தை எட்டும வரை அவள் சளைக்காமல் நடந்ததில் எங்களுக்கு மிகவும் ஆச்சர்யம் என்றனர் எலிஷாவின் பெற்றோர். (ற)

# நேபாளத்தில் 20 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

(காத்மண்டு)

மாவோ தீவிரவாதிகள் 20 பேர் நேபாள பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் தென்மேற்கு நவல் பராசி மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்தது.

நவல்பராசி மாவட்டத்தில் சோர்மாரா மற்றும் அருண்கோலா பகுதியில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக மாவோ தீவிரவாதிகள அமைத்திருந்த தடைகளை அகற்றும நடவடிக்கையின் போது தீவிரவாதிகளுககும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் பலத்த சண்டை ஏற்பட்டது.

இதில் ஒரு படைவீரர் கொல்லப்பட்டதுடன் ஐவர் காயமடைந்தனர். பாதுகாப்பு படை வீரர்களுக்கும் தீவிரவாதிகளுக்கும இடையில் மூண்ட கடும் சண்டையில் 20 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். (து)

# தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடாத்தப்படும் பல்வேறு போட்டிகள்

(சாவகச்சேரி)

நூலக ஆவணவாக்கல் சபையால் ஒக்கோடபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாக வரையறுக்கப்பட்டுள்ளது.

இதன்னை சிறப்புற மேற்கொள்ளுமுகமாக போட்டிகள் பலவற்றினை நடாத்தி பெறுமதி வாய்ந்த பணப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

பிரிவு ரீதியாக புகைப்படம், சுவரொட்டி, கட்டுரை போன்ற போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

'இருளில் இருந்து ஒளிக்கு...' என்ற தலைபபில் புகைப்படப் போட்டியும், 'சாதகமான வாழ்வுக்கு அறிவு படிக்கல்' எனும் தலைப்பில் சுவரொட்டியும் கட்டுரைப் போட்டியில் 8 -11 வயதிற்கிடைப்பட்டோருக்கு 1)நான் வாசித்த நல்ல நூல், 2)நூலுடன் சினேகம் கொள்வோம், 3)எனது பாடசாலை நூலகம் என்ற தலைப்பில் 500 சொற்களிற்குக குறையாமல் ஒரு கட்டுரை எழுதும் போட்டியும் நடாத்தப்படவுள்ளது

12 - 15 வயதிற்கிடைப்பட்டோரிற்கு 1)வாசிப்பின் மூலம் ஒரு பூரணமான சமுதாயத்தை நோக்கி, 2)வாசிப்பதற்கு தொழிநுட்பம் பயன படுத்துவோர், 3)சிறுதுளி பெரு வெள்ளம் எனும் தலைப்புகளில் ஒன்றிற்கு 1000 சொற்களிற்கு குறையாமலும் எழுதுதல் வேண்டும்.

புகைப்படப் போட்டிக்கு முதல் பரிசாக 25 ஆயிரம் ரூபாவும், அடுத்து 15 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாவும் 4 முதல் 10 வரைக்குட்பட்டோர்க்கு தலா 5000 ரூபாவும் பரிசில்களாக வழங்கப்படவுள்ளன.

சுவரொட்டிப் போட்டியில் 11-15 வயதுப் பிரிவில் முதற்பரிசாக 10 ஆயிரமும், அடுத்து 7500 ரூபா, 5000 ரூபா பரிசில்களும் 16-19 வயதுப் பிரிவுக்கு மூன்று பேரிற்கு 15,000, 10,000, 7500 ரூபா வீதம் பரிசில்களும்

கட்டுரைப்போட்டியில் முதல் மூவரிற்கு பெறுமதியான பணப்பரிசில்களும் 4முதல 10 வரையான இடம்பெறுவோர்க்கு 2500 ரூபா பணப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

வெற்றியாளர்களுக்குப் பணப்பரிசில்களோடு பரிசுக் கிண்ணமும், சான்றிதழ் முதலியனவும் வழங்கப்படவுள்ளன. இப்போட்டிக்கான இறுதித் திகதி இம்மாதம் 31ஆம் திகதியென அறிவிக்கப்படுள்ளது. (ந-21)

# மிதிவெடியினால் பாதிக்கப்பட்ட 50 பயனாளிகளுக்கு கடனுதவி

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி செயற்பாட்டு வாரத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட சர்வோதயம் மிதிவெடியினால் பாதிக்கப்பட்ட 50 பேருக்கு கடனுதவிகளை வழங்கவுள்ளது.

இந்நிகழ்வு இன்று காலை 10.00 மணிக்கு யாழ். மாவட்ட சர்வோதய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

மிதிவெடியினால் பாதிக்கப்பட்டோருக்கு சுயதொழில் முயற்சிக்காக தலா பத்தாயிரம் முதல் 15ஆயிரம் ரூபா வரை கடனுதவி வழஙகப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-19)

# வெகு விமர்சையாக நடைபெற்ற மடுமாதாவின் வருடாந்த திருவிழா

(மன்னார்)

இலங்கையின் முக்கிய கத்தோலிக்க திருத்தலங்களில் ஒன்றான மடுமாதாவின் வருடாந்தத் திருவிழா மடுத்திருத்தலத்தில நேற்றுமுன்தினம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

மடுமாதாவின் இத்திருவிழாவில் 4 இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

கலந்துகொண்ட அனைவரும் நாட்டில் நிரந்தர சமாதானம் வேண்டி தமது பிரார்த்தனைகளை மேற்கொண்டனர்.

மடுமாதா திருவிழாவினை முன்னிட்டு நேற்றுமுன்தினம் அதிகாலை 5.15 மணியளவில் தமிழ் மொழியிலும், 5.45 மணியளவில சிங்கள மொழியிலும் திருப்பலிகள் ஒப்புக கொடுக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து காலை 6.30 மணிக்கு திருவிழா கூட்டுத் திருப்பலி தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் கொழும்புப் பேராயர் பேரருட்திரு ஒஸ்வோ்ஸ் கோமிரஷ் ஆண்டகையினாலும், யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினாலும் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

திருவிழாத் திருப்பலியினைத் தொடர்ந்து மடுமாதா திருச்சுருப பவனி இடம்பெற்றது.

தொடர்ந்து அன்னையின் திருச்சுருப ஆசீர்வாதத்துடன் திருவிழா நிறைவுபெற்றது. (ந-4)

# தென்மராட்சியில் திருடர் தொல்லை

(யாழ்ப்பாணம்)

ஜன்னல் கம்பிகளை உலக்கையால் வளைத்தும் தடியின் நுனியில் கம்பிகளை கட்டி தலையணையருகே இருந்த தங்கச் சங்கிலியை திருடவும் தென்மராட்சியல் திருடர்களால் முயற்சிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் மீசாலை வாகையடியில் கி.சேமாசுந்தரம், கிருஸ்ணபிள்ளை, ஆகியோரது வீட்டு ஜன்னல்கள் நள்ளிரவு வேளை உலக்கையால் வளைக்கப்பட்டு இவர்களில ஒரு வீட்டினுள் நுழைந்து உடுப்புகள் பொருட்கள் பலவற்றினுள்ளும் கிளறி ஆராய்ந்து விட்டு சென்றுள்ளனர்.

மற்றயவர் வீட்டு ஜன்னல் வளைத்த சத்தததில் வீட்டிலுள்ளோர் விழித்துக் கொண்டவுடன் திருடர்கள் ஓடிவிட்டனர்.

இதேயிடத்தில் கனகரட்ணம் என்பவரது வட்டு ஜன்னலூடாக உள்ளே பார்த்த திருடாகள் உள்ளே படுத்திருந்த பெண்ணின் தலைமாட்டருகேயிருந்த சங்கிலியை எடுப்பதற்காக தடியொன்றில் சிறிய கம்பியை வாழை நாரால் கட்டி தடியை உள்ளே நுழைத்தபோது பெண் விழித்து கூக்குரலிடவே திருடன் தப்பித்துக் கொண்டான்.

இவ்வீட்டில் இருதினங்களின் முன்பும் திருடர்கள் இவ்வாறு திருடமுயன்றபோது துரத்தப்பட்டமை குறிப்பிடத்தககது. (ந-21)

# தெய்வீக இசையரங்கில் இன்று...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடாத்திவரும் தெய்வீக இசையரங்கில் எட்டாம் நாள் நிகழ்வில் இனறைய இசைக்கச்சேரியில் பாட்டு எஸ்.சிவஞானராசா, வயலின் வி.மதுரா, மிருதங்கம், எஸ.வரதராஜ சர்மா, முகர்சிங் எஸ்.விமல்சங்கர் ஆகியோர் இசை நிகழ்த்தவுள்ளார்கள். (ந-19)

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை சதாம் கதை 36

பி.ஜே.ராஜய்யா

## இஸ்ரேல் அலறியது

பெண்டகன் அமெரிக்க இராணுவத் தலைமையகம் அனைத்து நாடுகளையும் அடக்கியாளும் வானளாவிய இராணுவ வலிமை தனக்கு இருப்பதாய் இறுமாப்புடன் பறைசாற்றுகிற மாதிரி விண்ணை நோக்கி நிமிர்ந்து நிற்கும் அடுக்குமாடிக் கட்டடம். அதன் ஏழாவது மாடியில் மரச் சுவர்களால் தடுக்கப்பட்ட அறையில் அமெரிக்க அரசின் இராணுவக்கொள்கைகளை வகுக்கும் இரண்டு உயர் அதிகாரிகள் அந்த புகைப் படத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களது முகங்கள் கேள்விக் குறியால் இறுகிப் போயிருந்தன.

அந்த புகைப்படம் ஈராக்கை வேவு பார்க்கும் அமெரிக்க ராக்கெட் எடுத்து அனுப்பியது. புகைப் படத்தில் இஸ்ரேல் இருக்கும் திசை நோக்கி-ஈராக் எல்லைக்குள் ஏவுகணைத் தளங்கள் புதிதாக அமைக்கப்பட்டு வருவது தெரிந்தது.

சந்தேகமில்லை...! இஸ்ரேலைத் தாக்க சதாம் முடிவு செய்துவிட்டார். அதற்கான ஏற்பாடு களை ரகசியமாக செய்து வருகிறார்...!

அவர் ஏன் இஸ்ரேலை தாக்க முடிவு செய்தார்? பாலஸ்தீனத்தை விடுவிக்கவா? அல்லது சில ஆண்டுகளுக்கு முன் தன் அனு உலையைத் தாக்கி அழித்ததற்கு பழிவாங்கவா? என்று தீர் மானிக்க முடியாமல் மூளையைக் குடைந்து கொண்டிருந்தார்கள் அமெரிக்க அதிகாரிகள்.

சதாம் உசேனின் சமீப கால நடவடிக்கைகள் அவர்களை ரொம்பத்தான் கலங்கடித்திருந் தன.

எட்டாண்டுகளாய் இழுத்துக்கோ பறித்துக்கோ என்று நீண்டு கொண்டே சென்ற ஈரான்-ஈராக் யுத்தம் சில வாரங்களுக்கு முன்தான் முடிவுக்கு வந்திருந்தது. இந்தப் போரில் அமெரிக்கா ஈராக்குக்கு மறைமுக ஆதரவு கொடுத்தது. அமெரிக்க தாசரான ஈரான் மன்னர் ஷாவை ஆட் சியிலிருந்து விரட்டியடித்தாலும் அவர் அமெரிக்காவில் ஒளித்து வைத்திருக்கும் சொத்துக்களை ஈரான் மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வற்புறுத்தி ஈரானில் இருந்த அமெரிக்கத் தூதரகத்தையும், தூதரக அதிகாரிகளையும் பிடித்து வைத்துக் கொண்டதாலும் கொமேனி மீது கடுப்பாகியிருந்த மெரிக்கா இப்போரில் ஈரான் தோற்கடிக்கப்படவேண்டும் என்று விரும்பியது. இதனால் சதாம் தன் இராணுவ பலத்தை அதிகரித்துக்கொண்டபோது அதை அமெரிக்கா ஆட்சேபிக்கவில்லை..

ஆனால் யுத்தம் முடிந்த பிறகு சதாம் இராணுவ வலிமையை தானாகவே குறைத்துக் கொள்வார் என்று அமெரிக்கா எதிர்பார்த்தது.

இராணுவ வலிமையை கட்டிக் காக்க அதிகசெலவு பிடிக்கும். போர்பாதிப்பு காரணமாக ஏற்கனவே தள்ளாடிக்கொண்டிருக்கும் ஈராக் பொருளாதாரம் இதற்கு இடம் கொடுக்காது. ஆகவே பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சதாம் தன் படைப்பிரிவுகள் பலவற்றை கலைத்து விடுவார் என்ற எதிர்பார்ப்புடன் அது காத்திருந்தது.ஆனால் ஏமாற்றமே மிஞ்சியது.

சதாம் ஈராக்கின் இராணுவ பலத்தை குறைத்துக்கொள்ளாதது மட்டுமல்ல மேலும் மேலும் வலுப்படுத்திக்கொண்டும் வந்தார். ஏவுகணைத் தயாரிப்பில் ஈராக் எட்டிய புதிய சாதனை இதற்கு ஓர் உதாரணம்.சோவியத் யூனியன் தயாரித்த ஸ்கட் ஏவுகணை 300 மைல்கள் மட்டுமே பாய்ந்து சென்று தாக்கக்கூடியது. அந்த ஸ்கட்டை ஈராக் வாங்கி சொந்த தொழில் நுட்ப அறிவைக் கொண்டு அபிவிருத்தி செய்தது. சுமார் 1200 மைல் பாய்ந்து சென்று தாக்கக்கூடிய புதிய ஸ்கட்டை அது தயாரித்தது. ரகசியமாய் ஏவி சோதித்துப் பார்த்தது. சோதனை முயற்சி வெற்றி பெற்றது.

சதாமுக்குக் கிடைத்த இந்த வெற்றியைக் கண்டு இஸ்ரேல் பதறியது. ஈராக்குக்கு சுமார் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் எதிரி இஸ்ரேல் மட்டும்தான் என்பதால் தன்னை தாக்கவே இந்த புதிய ஏவுகணைஎன்று சரியாய் யூகித்த இஸ்ரேல் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அலறியது.

இஸ்ரேலுக்கு தேள் கொட்டினால் அமெரிக்காவுக்கு நெறி கட்டிக்கொள்ளுமே... அமெரிக்கா வும் அதிர்ந்தது.

இஸ்ரேல் இருக்கும் திசை நோக்கி புதிய ஏவுகணைத் தளங்கள் அமைப்பதில் சதாம் மும்முரமாக ஈடுபட்டிருப்பதைச் செயற்கைக்கோள் எடுத்த புகைப்படம் காட்டுவதாலும் ஏவு கணையின் முனையில் பொருத்தக் கூடிய அணுகுண்டைத் தயாரிக்கும் முயற்சியில் சதாம் தீவிரமாக இருப்பதாக சி.ஐ.ஏ.ஏற்கனவே எச்சரித்திருப்பதாலும் அவர் இஸ்ரேலுக்கு எதிராக அனு ஆயுதப்போர் தொடங்க ஆயத்தமாகி வருகிறார் என்று அமெரிக்க உயர் அதிகாரிகள் அஞ்சினார்கள்.

"சதாமிடம் உள்ள பேரழிவு ஆயுதங்களை அழித்து அவரது இராணுவ வலிமையைக் குறைக்க நீங்கள் நடவடிக்கை எடுக்கிறீர்களா? அல்லது திடீர்த்தாக்குதல் நடத்தி அவரது அனு உலையை நாசம் செய்தது போல நாங்கள் தன்னிச்சையாக நடவடிக்கை மேற்கொள்ளவா என்று அமெரிக்காவை இஸ்ரேல் நிர்பந்திக்கத் தொடங்கியது. இந்த நிர்ப்பந்தத்துக்குப் பணிந்த அமெரிக்காவின் அன்றைய துணை ஜனாதிபதி சீனியர் ஜார்ஜ்புஷ் வெளியுறவு அமைச்சர் ஜார்ஜ் ஷல்ட்ஸ் ஆகியோர் ஈராக் மீது கடும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்கள்.

இஸ்ரேல்-அமெரிக்க கூட்டுச்சதிபற்றித் தெரியாத சதாம் அமெரிக்காவுடனான நல்லுறவை வலுப்படுத்தும் நோக்கத்துடன் தனது வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீஸை அந்நாட்டுக்கு அனுப்பிவைத்தார். "ஈரானுக்கு எதிரான போர் முடிந்தது. போரில் ஈராக் வென்றது என்ற அறிவிப்பை சதாம் 1988 ஆகஸ்ட் 8ஆம் திகதி வெளியிட்டார். இது வெளியிடப்பட்டு சரியாக ஒரு மாதத்துக்குப் பிறகு செப்டம்பர் 8ஆம் திகதி தாரிக் அஸீஸ் வாஷிங்டன் வந்திறங்கினார்.

காரியம் ஆகும் வரை ஒரு கொள்கை. காரியம் ஆனபிறகு தலைகீழான வேறொரு கொள்கை என்கிற பச்சோந்தித்தனம் அமெரிக்க அரசின் ரத்தத்தோடு ஊறிப்போன விஷயம் என்பது தாரிக் அஸீஸீக்குத் தெரியாததல்ல. ஆனால் ஒரே மாதத்தில் நண்பனை விரோதியாக்கி தாக்கித் தகர்க்கும் குரூரம் அதற்கு இருக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

நல்லெண்ணத்துடன் ரொம்ப ரிலாக்ஸாக வந்திறங்கிய தாரிக் அஸீஸுக்கு வாஷிங்டனில் பேரதிர்ச்சி காத்திருந்தது.

அமெரிக்கா மீது சதாம் தீராப்பகை கொள்ள அது காரணம் ஆனது... (தொடரும்)


## அடுத்து---

சந்தனக் கடத்தல் வீரப்பனின் வாழ்வையும் மரணத்தையும் அலசி ஆராயும் "வீரப்பன் வாழ்வும் வதமும்" (உண்மைகளும் உறுத்தல்களும்)தொடர் உங்கள் மீள்பார்வையில் வெளிவரும்.



# நல்லூரான் திருவடிக்கு

## இன்று எட்டாம் திருவிழா



## விழுந்து கும்பிட்டால் வில்லங்கம் இல்லை

நல்லூரரை வலம் வந்து ஞானத் தங்கமே
நாங்கள் விழுந்து கும்பிட்டாலடி
வில்லங்கம் வாராதடி ஞானத்தங்கமே
விடிவிங்கே தோன்றுமடி ஞானத்தங்கமே
எல்லாமே தருவானடி ஞானத்தங்கமே
எங்களுக்கு நல்லூரான் தஞ்சமடி ஞானத்தங்கமே
பொல்லாப் பொன்றுமில்லையடி ஞானத்தங்கமே
பொற்கோவில் வலம் வந்து கும்பிட்டாலடி

*மதுரகவி*

## முருகனை நினை மனமே

வாழ்வு வளம் பெற்று துயருற்றிருந்தாலும்
தாழ்வு தான் வாழ்வில் நிலையாயிருந்தாலும்
எத்தர்கள் எள்ளி நகையாடி கேலிக்கை செய்தாலும்
சித்தர்கள் போற்றிய முருகனை நினை மனமே
அதிகாலையை உணர்ந்திட கண்டா மணி ஒலித்திட
விடியலை வரவேற்று சேவல் ஒலி எழுப்பிட
வாழ்வு வளம் பெற வைகறையில் எழுந்து
தாழ்வு நீங்கிட நல்லூர் முருகனை நினை மனமே

*மு.விக்னேஸ்வரன்*

## நல்லையிலே வந்து பாருங்கள்

நல்லூரிலே திருவிழா வந்து பாருங்கள்
கந்தன் வேலேந்தி வருகிறான் வந்து பாருங்கள்
ஆண்டுக்கொரு பெருவிழா வந்து பாருங்கள்
பக்தியுடன் பண் பாடுவாரே வந்து பாருங்கள்
வண்ணக் காவடிகள் ஆடிடவே வந்து பாருங்கள்
எழிலாகமுருகன் உலாவருகிறான் வந்து பாருங்கள்
வள்ளி தெய்வயானை மருங்கிருக்கவே வந்து பாருங்கள்
ஆறுமுருகன் மயில் மீது நடம்புரிவதை வந்து பாருங்கள்
எங்கள் பழவினைகள் நீங்கிடவே வந்து பாருங்கள்
தினமும் அருள் மழை பொழிகின்றான் வந்து பாருங்கள்

*நயினை விஜயன்*

## நீ அசைந்தாடி வாவா

வண்ண வண்ண வாகனங்கள்
ஏறிடவே வா வா
விண்ண திரும் முரசினொலி
கேட்டிடவே வாவா.
பண்ணிசை பஜனை கீதம்
பார்த்திடவே வாவா
கண்கவர் மின்னொளியில் கந்தா
நீ அசைந்தாடி வாவா!

*அரியாலையூர் சி.சிவதாசன்*

## நல்லூரின் நாயகனே

நல்லூரின் நாயகனே குறவள்ளி
நண்ணும் மனோகரனே என்றும்
எண்ணும் உன் நாமம் உளமதில்
நின்று நிலைத்திடவே
உன்தன் எழிற்கோலம் என்றுமே
இன்பம் தன்னை அளிக்கும்
சென்று உலவிவர வீதியெங்கும்
சேர்ந்தே சிறந்து நிற்கும்
வள்ளல் நின் பெரும் புகழை
தெள்ளு தமிழில் வடிக்க
கள்ளு மதும் ஊறும்மலர்போல
உள்ள மது துளிர்க்கும்
நாமமது புகல என் நாவும் இனித்துவிடும்
ஏமமதே ஆனாய் பவக்கடல் நீந்திக் கடந்துவிட
காமமதை ஒழிப்பாய் உள்ளக் களவுதனை அழிப்பாய்
தேமதுரத் தமிழின் கடவுளாய் தெளிவுற நிற்பவனே

*நா.வரதராசா*

செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல் - குறள்

வலம்புரி

## தேர்தல் ஆணையத்தின் துணிவான முடிபு

2006ஆம் ஆண்டிலேயே ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னர் அறிவித்ததிலிருந்து, அத்தேர்தல் தொடர்பான சர்ச்சை ஏற்பட்ட வண்ணமேயுள்ளது.

2000ஆம் ஆண்டில் நடைபெறவேண்டிய ஜனாதிபதித் தேர்தலை ஒருவருடம் முன்னதாக 1999ம் ஆண்டு நடத்தப்பட்டது.

1999ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதன் மூலமாக தனது வெற்றியை உறுதி செய்யமுடியும் என்ற காரணத்தினாலேயே சந்திரிகா குமாரதுங்க, முதிர்வு காலத்திற்கு ஒரு வருடம் இருப்பதற்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தினார்.

அவரின் எதிர்பார்ப்பிற்கு அமைவாக தேர்தல் முடிவுகள் அமைந்திருந்தன. அதன் பிரகாரம் 1999ஆம் ஆண்டில் இரண்டாவது தடவையாக சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக பதவியேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

1999ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தல் நடைபெற்றால் அதன் அடுத்த தேர்தல் 2005ஆம் ஆண்டில் நடைபெறவேண்டுமென்பதை அரசியல் யாப்பு வலியுறுத்துகிறது.

ஆனால் ஜனாதிபதியின் பதவிக்காலத்தில் விட்டுக்கொடுத்த ஒரு வருடத்தை சந்திரிகா குமாரதுங்க எடுத்துக்கொள்ள முடிபு செய்தார். அதற்காக 2000ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு முறை பிரதம நீதியரசருக்கு முன்னால் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அரசியல் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதித்தேர்தல் நடைபெறவேண்டிய 2000ஆம் ஆண்டில் மீண்டுமொருமுறை சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொள்வதன் ஊடாக இழந்துபோன ஒரு வருடத்தையும் உள்வாங்கிக்கொள்ள ஜனாதிபதி சந்திரிகா நினைத்தார்.

அதனை தன்னளவில் வைத்துக்கொள்ளாமல் தனது நினைப்பிற்கு இருக்கக்கூடிய எதிர்ப்பினை அறிவதற்காக அதனை அம்பலப்படுத்தினார்.

2006ஆம் ஆண்டிலே ஜனாதிபதித்தேர்தல் நடைபெறுமென்ற தகவலைக் கேள்வியுற்றதும் ஐக்கியதேசியக்கட்சி சீறிப்பாய்ந்தது.

2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதித்தேர்தலை நடத்தத்தவறினால் சாத்வீகப்போராட்டங்களை நடத்துவோம் என்றும் கோஷம் எழுப்பியது.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்றாவது முறையாக ஜனாதிபதிப் பதவியில் சத்தியப்பிரமாணம் செய்தது சட்டத்திற்கு அமைவானதா என்ற பிரச்சினை எழுந்தது.

இதன்போது வேண்டுமானால் ஜனாதிபதி ஒருவர் ஒவ்வொருநாளும் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளலாம் என்று பிரதமநீதியரசர் கருத்துக் கூறினார்.

இருந்தும் 2005ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காக பத்து இலட்சம் கையெழுத்துக்களை பெற்றுக்கொள்ளும் திட்டத்தை ஐ.தே.கட்சி ஆரம்பித்தது.

ஜனாதிபதித்தேர்தலை உரிய காலத்தில் நடத்த வேண்டுமென்பதை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் இறுக்கமாகவே நின்று கொண்டார். இவை எந்தளவு தூரம் சந்திரிகா குமாரதுங்கவை மாற்றியதென்பது தெரியாவிடினும் தேர்தல் ஆணையாளர் – ஜனாதிபதித்தேர்தலை 2005ஆம் ஆண்டிலேயே நடத்தவேண்டுமென்ற கருத்தை ஆணித்தரமாக உயர்நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு தேர்தல் ஆணையத்தின் துணிந்த முடிபென்றே கூறவேண்டும்.

# கிழக்கு கொலைகளுக்கு அரசாங்கமே பொறுப்பு

**ஜோசப் எம்.பி**

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து இடம்பெற்று வரும் கொலைகளுக்கு அரசே பொறுப்பு என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்துத்தெரிவிக்கையில் முக்கியமாக கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவருகின்ற கொலைகளுக்கு அரசே பொறுப்பு. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் 8ஆவது சரத்தில் முதலாவது பகுதியில் கூறியிருப்பது போன்று அந்த யுத்த நிறுதத ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 30 நாட்களுக்குள் ஆயுதக்குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட்டிருக்க வேண்டும். அது நடைபெறாததால் இதுபோன்ற கொலைகள் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றிருக்காது.

விடுதலைப் புலிகளும் இதனைத்தான் நோர்வே நாட்டு பிரதிநிதிகள் ஊடாக அரசிற்குத் தெளிவுபடுத்தியுள்ளனர். அதேவேளை, கண்காணிப்புக் குழுவினரிடமும் பலமுறை முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக் கூட பாராளுமன்றத்தில் தெளிவுபடுத்தியுள்ளது. எனவே, யுத்த நிறுத்த ஒபபந்தத்தின்படி அந்த எட்டாவது சரத்தின் முதலாவது பகுதியை உடனடியாக அரசு காலதாமதமானாலும் அதனை நிறைவேற்ற முன்வரும பட்சத்தில் கிழக்கில் இடம்பெற்றுவரும் கொலைகள் கண்டிபபாக நிறுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரு-4)

## வவுனியா மாவட்டத்தில் தொழில் சார் பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பம்

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் தொழில்நுட்பக் கல்வித்திட்டத்தினை அபிவிருத்தி செய்வதற்காக ஜனாதிபதி நிதியத்திலிருந்து ரூபா 20 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தச்சு, மேசன் பயிற்சிநெறிகள் கணனி மென்பொருள் திருததுதல் முச்சக்கரவண்டி,மோட்டார் சைக்கிள் திருத்துதல், அலுமினயப்பொருட்கள் ஒட்டுதல், நெசவு மற்றும் தும்பு உற்பத்தி,கழிவு கடதாசிப் பயன்பாடு, ஒட்டுவேலை, உணவு பதனிடல் போன்ற பதினொரு பயிற்சி நெறிகள் வவுனியா தொழில்நுட்பக்கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வவுனியா மாவட்டப் பிரதித்திட்டப் பணிப்பாளர் எஸ்.பரமகுலசிங்கம தெரிவித்துள்ளார்.

ஆறுமாத காலத்திற்குரிய இந்தப் பயிற்சி நெறியின் போது பயிற்சியாளர்களுக்குக் கொடுப்பனவும் பயிற்சி முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

18வயதிற்கும் 40வயதிற்கும் உட்பட்ட இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.தத்தமது கிராமசேவையாளரிடம் விண்ணப்பங்களைப்பெற்று இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்னதாக பிரதேச செயலாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

500பயிற்சியாளர் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (து-2)

## யானையை மோதியபின் தரிக்காது சென்ற ரயில்

(கொழும்பு)

மட்டக்களப்பில் இருந்து நேற்று முன்தினம் இரவு மாகோ நோக்கி பயணம் செய்த ரயிலில் யானை மோதிய சம்பவம் தொடர்பாக உடன் விசாரணை செய்யுமாறு சுற்றாடல்துறை அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

பதவரஸ்வெல 1-1கல்லோயாவிற்கு இடையில் ரயிலுடன் மோதிய யானை ஒன்று காயத்திற்குள்ளானது. மட்டக்களப்பில் இருந்து நேற்று முன்தினம் இரவு சென்ற ரயிலில் யானை மோதுண்ட போதும் ரயில் நிறுத்தப்படாமல் மாகோ ரயில் நிலையம் வரை செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்துமாறு வனப்பாதுகாப்புப் பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அமைச்சர் பௌசி தெரிவித்துள்ளார்.

இவ்வாறான விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு வனப்பாதுகாப்பு அதிகாரி ஒருவர் ரயிலில் பயணம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

யானை மோதிய போதும் ரயிலை நிறுத்தாத சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடத்துமாறு அமைச்சர் பௌசி பணித்துள்ளார். (து-2)

## நால்வர் திருவீதி உலா

அகில இலங்கை திருமுறை மன்றம் வருடம் முழுவதும் மாதம் ஒரு திருமுறை முற்றோதல் என்ற வகையில் ஆலயங்கள் தோறும் திருமுறைச் சுவடிகள், நால்வர் திருவுருவங்கள் ஆகியவை வீதியுலாவாக எழுந்தருளச் செய்து பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதல் செய்துவருவது குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் இன்று காலை 5 மணியளவில் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தில் இருந்து நால்வர் பெருமக்கட் திருமுறைச்சுவடிகள் வீதியுலாவாகப்புறப்பட்டு புங்குடுதீவு சர்வோதய நிலைய ஸ்ரீ நடராஜப்பெருமான் சபா மண்டபத்தில் எழுந்தருளச் செய்து ஐந்தாம் திருமுறை முற்றோதல் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும். (து)

# ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்களை ஒரே நாளில் நடத்த அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டால் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தோதல ஆகிய இரண்டையும் ஒரே நாளில் நடத்தும் வகையில் பாராளுமன்றத்தைக் கலைத்து விட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலையும் பாராளுமன்றத் தேர்தலையும் ஒரேநாளில் நடத்த முடியுமா என்பது பற்றி ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தல் ஆணையாளரிடம் வினவியருக்கின்றனர்.

இவ்விரு தேர்தல்களையும் ஒரே நாளில் நடத்த முடியுமா என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவிடம் வினவியபோது இவ்விரு தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்த வேண்டியேற்பட்டால் அதனை தேர்தல் அலுவலகததினால் நிறைவேற்ற முடியும். நிதி ஒதுக்கீட்டுப் பிரச்சினையும் எழாது என்று தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் திகதி பற்றிய தனது கருத்தை தேர்தல் ஆணையாளர் எதிர்வரும் 18 ஆம திகதியே அறிவிக்கத் திட்டமிட்டிருந்தாரென உத்தியோகபற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் ஜனாதிபதியின் கடிதம் மற்றும் சோபிததேரரின் மனு என்பவற்றிக்கு உயர் நீதிமன்றம் தனது கருத்தைத் தெரிவிக்கும் வரை மௌனம் சாதிகக தேர்தல் ஆணையாளர் தா மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சோபித தேரரின் மனுவை தள்ளுபடி செய்து 2006 இல் தேர்தல் நடத்த உத்தரவிடுமாறு கோரி ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சிதாக்கல் செய்த மனு எதிர்வரும் 22ஆம் திகதி ஐந்து நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

பகிரங்க பதவிப்பிரமாணம் மற்றும் இரகசிய பதவிப் பிரமாணம் இவையிரண்டும் பிரதம நீதியரசர் முன்னிலையிலேயே இடம்பெற்றுள்ளதால் ஐந்து நீதியரசர்கள் கொண்ட இந்தக குழுவில் பிரதம நீதியரசர் அங்கம் வகிக்கக் கூடாதென அடிப்படை எதிர்ப்பொன்றை முன்வைக்க மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் தீர்மானித்துள்ளது.

இன்னும் இரு வாரங்களுக்குள் உயர் நீதிமன்றத்தின் கருத்து அறிவிக்கப்படும் என நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (து-4)

## ஐ.தே.கவை சாடுகிறார் பிரதியமைச்சர்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை விடுதலைப் புலிகள் கொலை செய்ததனை ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி கண்டிக்க முன்வரவில்லை என பிரதியமைச்சர் சிறிபதி சூரியாராட்சி குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் தனது கண்டனங்களைத்தெரிவித்து நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளினதும் ஆட்சேபத்தினைத் தெரிவிப்பதற்காகவும் படுகொலையினைக் கண்டிப்பதற்காகவும் செய்தியாளர் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது.

இந்த மாநாட்டில் ஐக்கிய தேசியக்கட்சியோ தமிழத் தேசியக்கூட்டமைப்போ ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசோ கலந்துகொள்ளவில்லையென பிரதியமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரு-4)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



**பலவீனம், தளைகள் அனைத்தும் கற்பனை. அவற்றைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னால் அவை மறைந்து ஒழிய வேண்டும். பல வீனமடையாதீர்கள். தப்புவதற்கு வேறு வழியில்லை. வீரர்களாக எழுந்து நில்லுங்கள். அச்சம் வேண்டாம். மூட நம்பிக்கை வேண்டாம். உண்மை யைக் கண்டு அஞ்ச வேண்டாம். மிகக் கொடிய துன்பமான மரணம் வந்தாலும் வரட்டும். நாம் இன்பமாக உயிரை விடத்துணிந்துள்ளோம்.**

சுவாமி விவேகானந்தர்

## கடன்வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மிதிவெடியால் பாதிக்கப்பட்டோருக்கான கடன் வழங்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு இல.3 பிளச்சர்ஸ் ஒழுங்கை சுண்டுக்குளி எனும் முகவரியில் அமைந்துள்ள சர்வோதய மாவட்ட நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் அ.சிவசுவாமியும், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலர் தி.எல்மோ ஆனந்தராசா, யுனிசெப்திட்ட அலுவலர் தி.சிறிஸ்கந்தராசா, மதிவெடி அபாயக் கல்வி திட்ட இணைப்பாளர் தி.சிவனேசசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

## மண்டைதீவில் தேர்த்திருவிழா

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயத் தேர்த் திருவிழா நாளை வியாழக்கிழமையும், தீர்த்தத்திருவிழா மறு நாள்வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளது. (ந)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் குமரகோட்டம் சித்தி வைரவர் அம்பாள் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்றும் தீர்த்தத்திருவிழா நாளையும் 1008 சங்காபிஷேகத்திருவிழா எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட் கிழமையும் பூங்காவனத்திருவிழா 23ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் நடைபெறும். (ற-2)

# அவசர காலச்சட்டம் அமுலில் உள்ளதால் கொலையாளிகளை இலகுவில் பிடிக்க முடியும்

## இராணுவப் பேச்சாளர் தயாரட்நாயக்க

(கொழும்பு)

அவசரகால நிலைமையின் கீழ் எதுவித ஆணையுமின்றி எந்த இடத்திலும் தேடுதல் நடாத்தவும், குற்றஞ்சாட்டின்றி எவரையும் தடுத்து வைக்கவும் பொலிஸாருக்கு அதிகாரம் கிடைத்துள்ளது என இராணுவப் பேச்சாளர் தயாரட்நாயக்கா தெரிவித்துள்ளார்.

இந் நடவடிக்கையின் மூலம் வெளிவிவகார அமைச்சரின் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட நபர்களை உடனடியாக கைதுசெய்ய முடியும் என அவர் தெரிவித்தார்.

அண்மைக்காலப் பகுதியில் பல விடுதலைப்புலி உறுப்பினர்கள் நகருக்குள் ஊடுருவியிருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. தற்போது பெருமளவில் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இராணுவத்தினர் பொலிஸாருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். ஊடுருவியிருப்பவர்களையும் அவர்களின் ஆயுதங்களையும் கைப்பற்றுவதே எங்களின் பிரதான நோக்கமாகும்.

இதேவேளை வெளிவிவகார அமைச்சரின் இறுதிக்கிரியைகள் நிறைவு பெற்றுள்ளதையடுத்து தேடுதல் நடவடிக்கைள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதிப்பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

முதலில் எங்களின் கவனம் அவரின் இறுதிக்கிரியைகள் மீதே இருந்தன. அது முடிவடைந்த நிலையில் தற்போது தேடுதல் நடவடிக்கை குறித்து கூடுதல்கவனம் செலுத்தி வருகிறோம்.

கொலைக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அத்துடன் கொலையாளி இதுவரை கைதுசெய்யப்படவுமில்லை. இது பல மாதங்களாக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையென்றே கருதப்படுகிறது என பிரதிப்பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார்:

இதேவேளை கதிர்காமரின் கொலை தொடர்பாக எத்தனை பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்ற தகவலை பிரதிப்பொலிஸ்மா அதிபர் குறிப்பிட மறுத்துள்ளார்.(ச-4)

## கண்காணிப்புக்குழு-புலிகள் திருகோணமலையில் சந்திப்பு

திருகோணமலை மாவட்ட யுத்த நிறுத்தக் குழுவினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுக்காலை சம்பூரிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பணிமனையில் இடம் பெற்றது. இச்சந்திப்பின் போது அவசர காலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டபின்னர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்துஇரா ணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு மக்கள் செல்வது தொடர்பான பிரச்சினைகள் பற்றி இங்கு விரிவாக ஆராயப்பட்டுள்ளது. (ச-4)

## இராணுவ வாகனம்-சைக்கிள் விபத்தில் வயோதிபமாது காயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ வாகனம்-துவிச்சக்கரவண்டி மோதியதில் துவிச்சக்கர வண்டியில் சென்ற வயோதிபப் பெண் காயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை யாழ்.தபால்நிலையத்திற்கு முன்னால் நடைபெற்றது. துவிச்சக்கர வண்டியில் மகளுடன் சந்தைக்கு சென்று கொண்டிருந்த போது தபால் நிலையத்திற்கு முன்பாகவுள்ள வளைவில் இராணுவ வாகனம் திரும்பிய வேளை இவ்விபத்து இடம்பெற்றது. துவிச்சக்கர வண்டியின் பின் னால் இருந்து சென்ற முதலாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.ராணி (வயது 65) என்பவர் காலில் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் சென்ற துவிச்சக்கரவண்டியும் சேதத்திற்குள்ளானது. (ச-19)

## முயற்சியாளர்களுக்கு இலகு கடன் வசதிகள்

(யாழ்ப்பாணம்)

தேசியதொழில் முயற்சி வங்கி (SME BANK) தொழில் முயற்சியாளர்களுக்கு இலகு கடன் வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இவ் கடன் வசதிகளை பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கட்டடத்தில் இயங்கும் கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சாத்தியமான தொழில் முயற்சிகளுக்கு கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் இக்கடன் வசதி பெற்றுக்கொடுக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது. (ச)

## நீரில் மூழ்கி சிறுவன் பலி

(யாழ்ப்பாணம்)

தண்ணீர் தொட்டியினுள் மூழ்கி சிறுவன் ஒருவர் பலியானார். இச் சம்பவம் நேற்று முன்தினம் ஆறுகால் மடம் ஆனைக்கோட்டையில் இடம்பெற்றுள்ளது.

பிரஸ்தாப சிறுவன் தண்ணீர்த் தொட்டியினுள் குளித்துக்கொண்டிருந்தவேளை திடீரென வலிப்பு வந்து நீரில் மூழ்கியதாக கூறப்பட்டது.

இச்சம்வத்தில் தெய்வேந்திரன் அர்ச்சுதன் (வயது 11) என்ற சிறுவனே மரணமானவர் ஆவார். சிறுவனின் சடலம் மரணவிசாரணையின் பொருட்டு யாழ்.போதனாவைத்தியசாலையில் வைக்கப்பட்டு பின்னர் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-19)

## தம்புள்ள சந்தியில் மல்லாவிவாசி கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மல்லாவிவாசியொருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தம்புள்ள சந்தியில் வைத்து இலங்கை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சின்னையா முருகேசு (வயது 54) என்ற இந்நபர் கொழும்பிலிருந்து கண்டிக்கு பேருந்தில் பயணம் செய்து கொண்டிருக்கையில் இந்த கைது இடம் பெற்றுள்ளது. (ச-4)

## பாடசாலைக்கு மாடிக் கட்டடம்

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கு நிக்கொட் திட்டத்தின் கீழ் புதிய இரண்டு மாடிக்கட்டடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இக்கட்டடம் சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சுமார் 130 அடி நீளமானதும் 25 அடி அகலமானதும் கொண்டதாகவும் சகல வசதிகளுடன் இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. (ற-49)

# வவுனியாவில் நேற்று கையெழுத்து வேட்டை

(வவுனியா)

ஜனாதிபதித் தேர்தலை இவ் வருடம் நடாத்தக்கோரும் ஐக்கியதேசியக்கட்சியின் மக்கள் மனுவில் கையெழுத்துக்களை சேகரிக்கும் நடவடிக்கை வவுனியாவில் நேற்று நடைபெற்றது.

கையெழுத்துப்பெறும்நடவடிக்கை வவுனியா பஸ்நிலையத்திற்கு அருகில் நேற்று முற்பகல் 11.30மணிக்கும், வேறு இரண்டு இடங்களிலும் இந்தக் கையெழுத்து பெறும் நடவடிக்கை இடம்பெற்றது.

இக் கையெழுத்து பெறும் நடவடிக்கையில் ஐக்கியதேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன தலைமை தாங்கினார். நாடளாவிய ரீதியில் பத்துலட்சம் பேரின் கையெழுத்துப்பெறும் நடவடிக்கை கடந்த 8ஆம் திகதி கொழும்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ச-8)

## அமைச்சர்....

வாழ்வில் அசம்பாவிதங்களை ஏற்படுத்தக்கூடிய தீமையான காலம் நிலவுவதாகவும், ஆனால் இம் மாதம் முழுவதும் பாராளுமன்றத்திற்கு சமுகமளிக்கமாட்டேன் என்றும் தன்னிடம் தெரிவித்ததாக ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கூறினார்.

அமைச்சர் கதிர்காமரின் வெளிநாட்டுப் பயணங்கள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகாரே எழுப்பியுள்ள கேள்விகளுக்கு தன் சார்பில் பதிலளிக்குமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டதாகவும், சபாநாயகரிடமும் விடுமுறைக்கு விண்ணப்பித்துள்ளதாக அமைச்சர் கதிர்காமர் தன்னிடம் தெரிவித்ததாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மேலும் தெரிவித்தார். (ச-4)

## பாராளுமன்றம்....

அதிகாரங்களின் அடிப்படையில் 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13 ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அவசரகால நிலையினை பிரகடனப்படுத்தியமை குறித்து ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு விளக்கமளிக்கவுள்ளார்.

இதேவேளை பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக கட்சித் தலைவர்களின் கூட்டமொன்று இன்று கூட்டப்படவுள்ளது.இக்கட்சித் தலைவர்களின் கூட் டம் இன்று முற்பகல் 11 மணிக்கு பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது. கடந்த வாரம் கூடிய பாராளுமன்றம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச,து -4,2)

## அமைச்சர் கதிர்காமரின்...

சரத்துக்கள் உடன்பட்ட விடயங்கள் இன்று நெருக்கடிக்குள்ளாக்கிக் கொண்டிருக்கின்றன. எங்களுடைய அரசியல் போராளிகளின் பாதுகாப்பிலிருந்து, மக்களுடைய இயல்பு நிலை கொண்டு வருவதிலிருந்து எல்லா விடயங்களுமே அரசாங்கம் தட்டிக்கழித்து இழுத்தடித்து வருகின்றது.

இதனால் மக்கள் மத்தியில் விரக்தி நிலையும் நம்நெருக்கடி நிலையும் இன்று அரசால் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற சூழலில் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடையும் எனத் தெரியாத நில்ல உள்ளது.

எங்களுடைய மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள் அவர்கள் அடைகின்றநெருக்கடி மற்றும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் நெருக்கடியான சூழல் போன்ற நிலை குறித்து அனுசரணையாளர்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் தெளிவு படுத்தியுள்ளோம் என்றார்.

லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையானது உள்விவகாரத்தினாலேயே இடம் பெற்றுள்ளது. பாதுகாப்பான இடத்தில் வைத்து அவரின் கொலை மேற்கொள்ளப்பட்டுள்ளமையாலேயே நாம் அவ்வாறு நாம் கருதுகிறோம்.கதிர்காமரின் கொலைக்கான பின்னணி என்பது விசாரணைகள் மூலம் கண்டுபிடிக்க வேண்டியது. அவற்றின் நிலை பற்றி கண்டறிய வேண்டிய பொறுப்பு அங்குள்ள அரசின் பொறுப்பு.

இதனை அவர்கள் தட்டிக்கழிக்க முடியாது. கொலை இடம்பெற்றவுடன் புலிகள் மீது குற்றம் சாட்டிய பின்னர் கொலையின் நோக்கத்தையோ கொலையாளிகளையோ கண்டுபிடிக்காமல் விட முடியாது. எவ்வாறாயினும் கொலைக்கான உண்மைகளைக் கண்டறிந்து எங்களின் நிலைப்பாட்டை அனைவரும் ஏற்றுக் கொள்கின்ற சூழல் வரும் என்றார்.

கதிர்காமரைப் பொறுத்தவரை தமிழ் மக்களால் வெறுக்கப்பட்டவர் என்பது உண்மை. இதனை வைத்துக்கொண்டு புலிகள் மீது சர்வதேச அளவில் குற்றம் சுமத்த முடியாது.

நாங்கள் எங்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றோம் தற்போது அமைதி முயற்சியை பெற்றெடுக்க முயல்கின்ற சூழலில் புலிகள் கொழும்பிற்குச் சென்று தாக்குதற்கான தேவையுமில்லை அதற்கான சூழலும் இல்லை.

இதனைக் கருத்தில் கொண்டு எங்களின் நிலையை சர்வதேசம் புரிந்து கொள்ளுமென நம்புவதாக தமிழ்ச் செல்வன் மேலும்தெரிவித்தார். (ச-4,8)

## துப்பாக்கிச்.....

ரணில் வீதிக்கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது துப்பாக்கிதாரி ஒருவர் மறைந்திருந்து இவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த இருவரும் மட்டக் களப்பு வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்கள். (ச-4)


விரைவில் வெளிவருகின்றன!

தமிழண்ணாவின்

தமிழ் ஓசை

பல் சுவை வெளியீடுகள்

திருமணக்கார் (குளிரூட்டியது)

வாடகைக்கு

☆ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)

☆ விசேட வைபவங்கள் ☆

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார்கள், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.



(அ-9843)

தொடர்பு: ரட்ணம்

சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ

சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

T.P:0777-903090, 077-3086939,0777-246117, 077-6018467

மனோகரா யாழ்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின அதிரடிவெளியீடாக

மாதவன், சதா, கோவை சரளா நடித்த



காட்சி: 10.30, 02.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ்

இன்று முதல் சங்கானை

பிரசாந், சிம்ரன் நடித்த

தமிழ்

கா.நே.11.00,2.45,6.00 (பு.நே)

நாதன்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது



சின்னா

வெற்றிகரமான ஜெய் ஆகாஷ், சிம்ரன் நடிப்பில்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.